for young
friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# கேரீஸ்

இளைஞர் மாத இதழ்

FRIENDS MISSIONARY PRAYER BAND

# ராஜாவின் வேலையைச் செய்திட வா!



Vol 33-Issue 12 - December - 2025

Private circulation only



# உடன்படிக்கைப் பேழை

## *THE ARK OF THE COVENANT*

Rev. Selvinraj G Charles



உடன்படிக்கைப் பேழை, சாட்சிப் பேழை அல்லது கடவுளின் பேழை என்றும் அழைக்கப்படுகிறது. இது ஒரு மத சேமிப்புப் பெட்டி மற்றும் நினைவுச் சின்னம். இஸ்ரவேல் மக்களால் மிகவும் புனிதமானப் பொருளாக கருதப்பட்டது. மகா பரிசுத்த ஸ்தலத்திலிருக்கும் உடன்படிக்கைப் பெட்டியின் மூடியில் இரண்டு கேருபீன்கள் செட்டைகளை வைத்து மறைத்திருப்பது போலிருக்கும். இந்தப் பெட்டியின் மூடிக்கு பெயர் தான் கிருபாசனம்.

கிருபாசனத்தண்டையில் வருகிறோம் என்று நாம் சொல்வது, மகாப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் வருகிறோம் என்று அர்த்தம். பிரதான ஆசாரியன் மட்டுமே, பல நாட்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டு அதுவும் வருடத்துக்கு ஒரு முறை, சில நிமிடங்கள் மட்டுமே செல்ல முடியும். இந்த கிருபாசனம் அருகிலுள்ள கேருபீன்கள் நடுவிலிருந்து தேவன் மோசேயுடன் பேசினார். மோசே, தேவனோடு பேச கிருபாசனத்தண்டையில் செல்ல வேண்டும். ஆனால் இப்போது நாம் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் தேவனோடு பேசுகின்றோம். இயேசுவின் இரத்தம் நமக்கு இருக்கிறது. நாம் அனைவரும் எவ்வளவு பெரிய பாக்கியம் பெற்றிருக்கிறோம்.

- பேழையைக் கையால் தொடக்கூடாது

  (The Ark of the Covenant must not be touched with hands):

இந்த உடன்படிக்கைப் பேழையின் கீழ்ப்பக்கத்தில் கொக்கி போன்ற வளையம் இருக்கும். பெட்டியை வனாந்தர வழி பிரயாணத்தில் தூக்கிச் செல்ல இந்த வளையம் வசதியாக இருக்கும். உடன்படிக்கைப் பெட்டியை யாரும் கையால் தொடக்கூடாது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், கையால் தொட்டால் செத்துவிடுவர். எனவே பொன்னால் செய்த கம்புகளை வளையத்துக்குள் விட்டு கம்பைப் பிடித்து தான் தூக்கிச் செல்வர். முக்கியமான விஷயம் என்னவென்றால் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் இந்த பெட்டியைத் தூக்க முடியும்.

- இந்த உடன்படிக்கைப் பெட்டி எதற்காக?

  (What it this Ark of the Covenant for?):

பாவ நிவிர்த்தி பண்டிகையைப் பார்த்தோம் அல்லவா! வருடத்தில் ஒருமுறை மட்டும் பிரதான ஆசாரியன், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்று இரத்தத்தைத் தெளிப்பான் அல்லவா! அது இந்த உடன்படிக்கைப் பெட்டியின் மீதுதான். இதன் மீது இரத்தம் தெளிக்கப்படும்போது, அதுவரை செய்த பாவங்கள் மன்னிக்கப்படும். ஒருவன் பாவம் செய்யும்போது நியாயப்பிரமாணத்தை மீறினவன் ஆகிவிட்டான். ஆனால் தேவன் அவனுக்கு கிருபையாக ஆசரிப்புக் கூடாரம் கொடுத்து, பலிகளைக் கொடுத்து, பண்டிகைகளைக் கொடுத்து அதன் மூலம் தேவனோடு நம்மை ஒப்புரவாக்கினார். அவன் செய்த பாவங்களை மன்னிப்பதற்காக கொடுக்கப்பட்ட பண்டிகை தான் பாவ நிவர்த்திப் பண்டிகை. அதன்பின் பாவம் செய்யக்கூடாது. ஆனால் பழைய ஏற்பாட்டு மனிதர்கள் அப்படி வாழ முடியவில்லை. எனவே ஒவ்வொரு வருடமும் மீண்டுமாக பாவம் செய்துவிட்டு, தேவனோடு ஒப்புரவாகும்படி பாவ நிவிர்த்தி பலியைச் செலுத்துவார்கள்.

இன்று நாம் ஜெபிக்கத் தொடங்கும் போது, நம் பலியாக பழுதற்ற ஆட்டுக்குட்டியான இயேசுவை வைத்திருக்கின்றோம். அன்று பழைய ஏற்பாட்டில், பலமுறை பலி செலுத்திக்கொண்டே இருந்தார்கள். ஆனால் இன்று நமக்கான பலி ஒரே தரமாக செலுத்தப்பட்டு முடிந்தது. ஆகவே நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள்.

- உடன்படிக்கைப் பெட்டிக்குள் என்ன இருக்கும்?

  (What will be in the Ark of the Covenant?)

உடன்படிக்கைப் பெட்டிக்குள் இரண்டு கற்பலகைகள் (பத்து கட்டளைகள் எழுதப்பட்டிருந்தது), பொற்பாத்திரம் (மன்னா வைக்கப்பட்ட), ஆரோனின் துளிர்த்த கோல் (பூத்துக்காய்த்திருந்த) இருக்கும். வானத்திலிருந்து மன்னா விழுந்திருந்தாலும், ஒரு சில இஸ்ரவேலர்கள் இராமுழுவதும் அதை வைத்திருந்தபடியால், அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது. ஆனால் அதே மன்னா தேவ சமூகத்தில் வைக்கப்பட்டு வனாந்தரத்திலே 40 வருடங்களாகியும் நாற்றம் எடுக்காதிருந்தது. அது தேவனுடைய சத்தியத்தை வெறும் தலையறிவிலே (மூளை) மாத்திரம் வைத்திருந்தால், அது மரணத்தை பிறப்பிக்கும். ஆனால் அதைத் தாழ்மையோடு தேவ சமூகத்திலே வைத்திருந்தால், அது தொடர்ச்சியாக (நீண்ட காலமானாலும்) புத்தம் புதியதாகவே இருக்கும். தேவ சமூகத்தில் தரித்திருக்கும் ஒரு மனிதனின் வார்த்தை எப்போதும் புதிதாகவே இருக்கும். ஆனால் அதே செய்தியை அப்படியே வேறொருவர் அதேபோல் செய்ய முயலும்போது உலர்ந்த மரித்த எலும்புகள் போலவேயிருக்கும்.

ஒரு சமயம் மோசே, ஆரோன் என்பவர்களுடைய அதிகாரத்தைக் குறித்து ஜனங்களால் கேள்வி எழுந்த போது, ஒவ்வொரு கோத்திர பிரபுக்களிடமிருந்தும், ஒவ்வொரு கோலாக 12 கோல் வாங்கப்பட்டு, தேவ சமூகத்தில் இரா முழுவதும் வைக்கப்பட்டிருந்தது. அதிலே ஆரோனின் கோல் மாத்திரம் துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமை பழங்களைக் கொடுத்தது. காய்ந்து போயிருந்த மற்ற கோல்களுக்காகத் தேவன் உயிரை கொடுத்ததின் மூலம், தேவன் தம்முடைய அதிகாரத்தை நிலைநாட்டும் பொருட்டு சாட்சிப் பகருகிறார். அந்தக் கோலும் 40 ஆண்டுகளாக புத்தம் புதியதாகவே இருந்தது. தேவ சமூகத்திலே அப்பியாசிக்கப்பட்ட அதிகாரமே மதிப்பு நிறைந்ததாக காணப்படும்.

சாமுவேலின் நாட்களிலே, சில ஆர்வமுள்ள இஸ்ரவேலர்கள் உடன்படிக்கைப் பெட்டிக்குள் இருப்பதைப் பார்க்கும் ஆர்வத்தினால் கிருபாசனம் திறக்கப்பட்டது. கர்த்தர் அப்படிச் செய்தவர்களை உடனடியாக அடித்ததினிமித்தம் செத்தார்கள் (1 சாமு. 6:19). இது கிறிஸ்து எப்படி தேவனும், மனிதனுமாயிருந்தார் என்பதை குறித்து அலசி பார்ப்பது எவ்வளவு ஆபத்தும், மதியீனமுமான காரியம் என்பதை நமக்கு உணர்த்துகிறது. நமக்குத் தேவையாயிருப்பது எல்லாம் தேவன் தம்முடைய வார்த்தையில் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறவர்களாக இருப்பதே. இஸ்ரவேல் புத்திரரின் மத்தியில் தேவன் வாசம் பண்ணும் ஸ்தலமாக பழைய ஏற்பாட்டிலே ஆசரிப்புக் கூடாரம் இருந்தது (யாத். 25:8). இது இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டு நமக்குள்ளே வாசம் பண்ணினக் காரியத்திற்கு நிழலாயிருக்கிறது (யோவான் 1:14).

நாமும் தேவ சமூகத்திலே அனுதினமும் ஜீவிக்க வேண்டும் என்பதே அவருடைய சித்தமாயிருக்கிறது. நம் ஜீவியக் காலமெல்லாம் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஐக்கியத்திலே ஜீவிக்க நாடுவோம். ஆமென்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

| | |
|---|---|
| இளசுகள் நாலும், இலை சாப்பாடும் | - 5 |
| ஏன் பணக்காரன் ஒரு முட்டாள்? | - 8 |
| இந்தியாவின் கண்ணீர் துளி - இலங்கை | - 10 |
| நடுக்குவாதம் (Parkinson's Disease) | - 12 |
| வலைகளும், விளைவுகளும் - டிஜிட்டல் மோசடிகள் 2025 | - 14 |
| படைப்பு நுண்ணறிவு | - 18 |
| வாசற்படியில் இயேசு | - 19 |
| மதமும் Vs மார்க்கமும் (Religion Vs Righteous) | - 20 |

# ராஜாவின் வேலையைச் செய்திட வா!

என் அன்பு இளம் நெஞ்சங்களுக்கு, கிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

1904ஆம் ஆண்டில் வேல்ஸ் நாட்டில் மாவபெரும் எழுப்புதல், பல ஆயிரம் மக்கள் மனந்திரும்பினர். இந்த மாவபெரும் அறுவடைக்குக் காரணம் யார்? இவான் ராபர்ட்ஸ் (1879-1951) என்ற பக்தன் கிறிஸ்துவின் அன்பினால் உந்தப்பட்டு 13 ஆண்டுகள் கண்ணீருடன் ஜெபித்து, கடவுளின் அன்பை மக்களுக்கு எடுத்துச் சொன்னதால் நடந்தது.

**“யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்” (ஏசாயா 6:8).**

மேற்காண்கிற வசனத்திற்கு தன்னை அர்ப்பணித்து இந்தியாவிற்கு வந்த வில்லியம் கேரியின் ஊழியத்தின் விளைவுகள் எத்தனையான மாற்றத்தை மேற்கு வங்காள மாநிலத்திற்கு தந்தது மாத்திரமல்ல, அவருடைய அர்ப்பணிப்பான தியாகமுள்ள ஊழியத்தின் மூலமாக அவர் “நவீன மிஷனெரி இயக்கங்களின் தந்தை” என அழைக்கப்பட்டார்.

வேதாகமம் முழுவதும் பல்வேறு சூழ்நிலையில் இருந்து கடவுள் தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு அழைப்பதை நாம் பார்க்கிறோம். தமது மக்களை எகிப்திலிருந்து வெளியே நடத்திச் செல்ல மோசேயை அழைத்தார். தமது மக்களை ஆண்டு நடத்த மேய்ப்பனாகிய தாவீதை அழைத்தார். இவைகள் அனைத்திற்கும் மேலாக முழுநேரப் பணி செய்யும்படி இயேசுவே அழைத்தார். (இந்த பட்டியலில்) இப்படி தொடர்ச்சியாக பேதுரு, மத்தேயு, பவுல் எனத் தொடர்கிறது.

தம்பி, தங்காய்! நமது ராஜாவின் வேலையைச் செய்ய எப்போதும் காலி இடமுண்டு. டாக்டர், இஞ்சினியர், அட்வகேட், டீச்சர் இன்னும் இது போன்ற வேலைகளுக்கு எப்போதும் கூட்டமாக, போட்டியாக உள்ள இந்த நாட்களில், ராஜாவினுடைய வேலையை (கிறிஸ்துவினுடைய ஊழியம்) செய்ய வருவோர் மிகவும் குறைந்துக் கொண்டே இருக்கின்ற நிலையை நாம் பார்க்கிறோம். நமது ஆர்வம் அல்லது தாலந்து எதுவாயிருந்தாலும், ஆண்டவருடைய தோட்டத்தில் அதற்கேற்ற வேலைகள் உண்டு.

டேவிட் லிவிங்ஸ்டன் ஒரு பூகோள ஆராய்ச்சியாளர். இவர் மிஷனெரியாகச் சென்றார். C. T. ஸ்டட் ஒரு புகழ் பெற்ற கிரிக்கெட் வீரர், இவரும் மிஷனெரிப் பணியை தெரிந்து கொண்டார். இதில் பெண்களும் விதிவிலக்கல்ல, மேரி ஸ்லேசர், ஐடா ஸ்கடர், பண்டித ராமாபாய் இப்படி ஆண்டவருடைய ஊழியத்தில் இன்றும் அநேக பெண்கள் வல்லமையாய் ஆண்டவருக்கு மகிமையான ஊழியத்தைச் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட மகிமை நிறைந்த ராஜாவின் வேலையைச் செய்ய அழைப்பு இல்லை, தரிசனம் இல்லை என்ற சாக்கு, போக்குகளைச் சொல்லாமல், அவருடைய சத்தத்திற்குச் செவி கொடுத்து, அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் என்ற வசனத்திற்கு நம்மை அர்ப்பணித்து, ராஜாவின் உன்னதமான வேலையைச் செய்ய முன்வருவோமா?

2025ஆம் ஆண்டு 11வது மாதம் வரை கர்த்தர் நமது வாலிப பிரிவின் ஊழியங்களை மிகவும் வல்லமையாய் ஆசீர்வதித்து வழிநடத்தி வந்தார். எங்களுக்காக ஜெபித்த, எங்களோடு ஊழியம் செய்த, எங்களை ஊக்குவித்த அத்தனை தேவனுடைய பிள்ளைகளையும் இந்நாட்களில் நன்றியோடு நினைவுக் கூறுகிறோம்.

முதல் கிறிஸ்துமஸ் அன்று மேய்ப்பர்கள் பிள்ளையைக் குறித்த செய்திகளை எங்கும் சொன்னார்கள். கிறிஸ்துமஸ் காலத்தை நற்செய்திப் பணிக்காக செலவிடுவோம்! முதல் வருகையைக் கொண்டாடும் நாம், நம் ராஜாவினுடைய இரண்டாம் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்துவோம்.

உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாகட்டும். கேரீத் வாசகர்கள் அனைவருக்கும் எங்களது இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவ கிருபை எப்பொழுதும் உங்களோடிருப்பதாக!

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
ஜெ. டேனியல் அருள்மணி

# ராஜாவின் ஊழியம்

## - மெல்கிசேதேக்

Mr. Isaac Kamalesh



எங்கள் ராஜா: **'இயேசு ராஜா'**, எங்கள் சின்னம்: **'சிலுவைச் சின்னம்'**, எங்கள் கோஷம்: **'அல்லேலூயா'**, எங்கள் பட்டணம்: **'மோட்சப் பட்டணம்'** என்ற கோஷங்களுடன் சிறுபிராயத்தில் ஆலயத்தை, அதைச் சுற்றியுள்ளத் தெருக்களில் பவனி வந்தது ஞாபகம். இதில் சேர்க்க வேண்டிய கோஷம் எங்கள் பணி: **'சுவிசேஷம்'** என்பதுதான். இதில் நாம் மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டியது, இயேசு ராஜா மற்றும் அவரின் பணி. அதேதான் இந்த மாதம் **'ராஜாவின் பணி'** என்ற தலைப்பின் கீழ் பார்க்கப் போகிறோம்.

ஊழியம் என்ற தலைப்பின் கீழ் இந்த ஆண்டு இந்த புத்தகத்தையும் சேர்த்து 48 ஊழியங்களைப் பற்றி நாம் படித்திருக்கிறோம். இந்த கடைசி மாதத்திலும் தோராவிலிருந்து நம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியதான **'ராஜாவின் ஊழியத்தை'** பற்றி பார்ப்போம். பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் (14) மற்றும் சங்கீதம் (110), புதிய ஏற்பாட்டில் எபிரேயரிலும் (6-8) மட்டுமே சொல்லப்பட்ட ஒரு நபர், அவர் பெயர் மெல்கிசேதேக்கு. இவரை குறித்து வேதாகமம், இவர் ராஜாவாக மட்டுமல்லாமல் ஆசாரியனாகவும் இருந்தார் என்று சொல்லுகிறது.

இன்றைய பிரசங்கப் பீடங்கள் மெல்கிசேதேக்கை மூன்று கோணத்தில் விளக்குகிறார்கள் .

1. மெல்கிசேதேக் **'கிறிஸ்து'** தான், கிறிஸ்துவாக ஆபிரகாமுக்கு முன்பு வந்தவர் அதாவது **'கிறிஸ்டோபானி'**.
2. கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாக அந்நாட்களில் வாழ்ந்து வந்த ஒரு ஆசாரியன்.
3. அந்நாட்களில் இவர் எருசலேமின் ராஜா மற்றும் நோவாவின் குமாரனாகிய சேம்.

ஆனால் நாம் கற்றுக் கொள்ளப் போவது, மெல்கிசேதேக் யார் என்ற ஆராய்ச்சியல்ல. கிறிஸ்துவின் ஊழியத்தை நிழலாட்டமாகச் சொல்லி வைத்த தோராவின் வேதப்பகுதியில் இருந்து நமக்குத் தேவையான சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள. மேலும், இன்னும் ஒருபடி மேலே போனால் பரலோக திட்டத்தை ஓரளவுக்கு நாம் புரிந்து கொள்ளலாம். மெல்கிசேதேக்கை ஜெபத்தோடு, வசன ஆதாரத்தோடு மற்றும் சரித்திரப் பின்னணியோடு கற்றுக்கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு. ஆனால் ஒன்று நிச்சயம் உங்கள் ஒவ்வொருவரையும் மெல்கிசேதேக்கை போல் ராஜாவாகவும், ஆசாரியனாகவும் தேவன் அழைக்கிறார்.

வேதாகமம் தெளிவாக சொல்கிறது. ஆபிரகாம், தன் வீட்டு வேலைக்காரர்கள் 318 பேரை கொண்டு நாலு ராஜாக்களை வெற்றிக் கொண்டான். தன் சகோதரன் லோத் மற்றும் அவனுடைய உடைமைகள் எல்லாவற்றையும் மீட்டுக்கொண்டான். பின்பு ராஜ வழியில் (Kings way), அதாவது ராஜாவின் பள்ளத்தாக்கு சாவேயில் மெல்கிசேதேக்கை சந்திக்கிறான். இந்த மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தசமபாகம் கொடுக்கிறார். ஆபிரகாமை மெல்கிசேதேக் உன்னதமான தேவன் பெயரில் **'ஏல்-எலியோன்'** என்னும் நாமத்தில் ஆசீர்வதிக்கிறார். முத்தாய்ப்பாக முதன்முதலாக கர்த்தரின் பந்திக்கு நிழலாட்டமாக ஆபிரகாமுக்கு அப்பமும், திராட்சைரசமும் கொடுக்கிறார். இவர் **'நீதியின் ராஜா'** என்று பொருள்படும் மெல்கி (ராஜா), சேதேக் (நீதி), சாலேமின் ராஜா (எருசலேம்) அதாவது சமாதானத்தின் ராஜா மற்றும் உன்னதமான தேவனுடைய ஆசாரியன் ஆவார். ஆனால் கிறிஸ்து, நித்திய பிரதான ஆசாரியன். கிறிஸ்து தேவனுடைய ஆசாரியன் அல்ல, இவரே தேவன்.

தெய்வத் திட்டம் மனிதனுக்கு ஆளுகையையும், ஆசாரியத்துவத்துவத்தையும் சேர்த்து கொடுப்பது தான். ஆதியாகமம் 2, 3 அதிகாரங்களை வாசித்தால், ஆண்டுக் கொள்ளுங்கள், பயன்படுத்துங்கள் என்ற இரண்டு மாபெரும் கட்டளைகள் மனிதனுக்கு கொடுக்கப்படுகிறது. நம் செய்தியின் மொழியில் சொல்ல வேண்டுமானால், ராஜாவும், ஆசாரியனும் இணைந்தது. இது 2000 ஆண்டுகள் கழித்து, ஜலப் பிரளயத்திற்கு பின்பு, தேவன் இரண்டையும் வெவ்வேறாகப் பிரித்து விட்டார். அரசாளுபவன் ஆசாரியனாக இருக்க முடியாது. ஆசாரியன் அரசாள முடியாது என்பதுதான். இதில் தாவீதுக்கு ஒரு விஷேசித்தப் பாக்கியம், அவன் ராஜாவாக இருந்தாலும் உடன்படிக்கைப் பெட்டியை ஏபோத் உடை அணிந்து எருசலேமுக்குள் கொண்டுவந்து கூடாரத்தில் வைக்கிறான். இது **'தாவீதின் கூடாரம்'** என்றும், புறஜாதிகளின் சபைக்கு அடையாளமும் ஆனது. இவனுக்கு முன்பு சவுல் ராஜா ஆசாரியப் பணியைத் துணிந்து தொட்டதால் தேவன் அவனை ராஜ்யபாரத்திலிருந்து தள்ளினார்.

வேதாகமத்தை நாம் வாசிக்கும்போது, ஆதாம் துவங்கி நோவா வரை, ஆபிரகாம் துவங்கி மல்கியா வரை, பேதுரு துவங்கி பவுல் வரை நாம் தெளிவாக படிக்கிறோம். ஆனால், இவர்களுக்குப் பின்னால் ஒரு சந்ததி நூல் இலையாக வருவதைக் காணலாம். அந்த வரிசையில் தான் மெல்கிசேதேக், யோபு, பிலேயாம், எத்திரோ, எலியா மற்றும் புதிய ஏற்பாட்டில், உங்களுக்கு எதிரே தண்ணீர் குடம் சுமந்து வருகிற ஒருவன் (வேதாகம வரலாற்றுச் சான்றுகள் தெளிவாகச் சொல்லுகிறது. இவன் ஒரு ஆசாரியன் இயேசுவை மேசியா என்று கண்டுக்கொண்டவன். தனது மேல் வீட்டறையைக் கர்த்தரின் பந்திக்கு ஆயத்தப்படுத்தியவன்). இப்படி ஒரு சந்ததி வேதம் முழுவதும் மறைபொருளாகவே வைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு வெளியே இருந்தவர்கள். முக்கிய இடங்களில் இஸ்ரவேல் வம்சத்தாரோடு தொடர்புக்குள் வருகிறார்கள். மேலும் இவர்கள் தேவனுக்கு பலி செலுத்தக்கூடியவர்கள். இவர்கள் அனைவருக்கும் தொடர்பு உண்டா அல்லது தனித்தனி நபர்களா. இவன் தாய் தகப்பன் அற்றவன், வம்சவரலாறு இல்லாதவன், முடிவில்லாதவன் போன்ற வார்த்தைகளைக் குழப்பிக்கொள்ளாமல் ஜெபத்தோடு காத்திரு. உன்னுடைய ஆவிக்குரிய வாழ்வில் தேவன் உனக்கு அதை தெரியப்படுத்துவார் அல்லது தெரியப்படுத்தாமலும் இருப்பார் (இன்று வரை அதைத் தெரிந்துக் கொண்டவர்கள் யாரும் இல்லை). செய்தியின் கடைசி பகுதிக்கு செல்வோம்.

ஆபிரகாம் தொடங்கி 2000 ஆண்டுகள் கழித்து, மனுக்குலத்தை மீட்க வந்த இயேசு ராஜரீகத்தையும், ஆசாரியத்துவத்தையும் தன்னகத்தே கொண்ட தேவ குமாரன். இவருடைய மரணம், உயிர்த்தெழுதல் நமக்கு மீண்டும் ராஜரீகத்தையும், ஆசாரியத்துவத்தையும் பெற்று தந்தது. இதை தான் பேதுரு தன் நிருபத்தில் ராஜரீக ஆசாரியக்கூட்டம் என்று நமக்கு அடைமொழிக் கொடுக்கிறார்.

தம்பி, தங்காய்! நீ வாழும் இப்பூமி நாசமாகும் காலம் வருகிறது. ஆட்சியாளர்களோ, அரசாள்பவர்களோ, சபைகளோ, சங்கங்களோ தடுமாறும் காலம் இது. இதில் உன் பொறுப்பு தான் என்ன? **'ராஜாவின் பணியை'** செய்ய வருவாயா?

# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)

நால்வரும் சரியாக **Blue Diamond Hotel (Sea food Special)** வந்து சேர்ந்தனர். கூட்டம் அதிகமாக இருப்பதினால் உள்ளே இடமில்லாமல் வெளியே காத்திருக்கின்றனர்.

ரகசியம்: டேய் இன்னும் எவ்ளோ நேரம் காத்திருக்கணும்.

சத்தியன்: இன்னும் **Half hour** (என் பெயரையும், நாலு சீட்டையும் கொடுத்தாச்சு) **Weekend** அதான் கூட்டமா இருக்கு. **board**அ வாசி (வீட்டு சமையல் சுவையில்). அதான் கூட்டம்ன்னு நினைக்கிறேன்.

சாதுரியன்: அதான் இல்ல, வீட்டு சமையல் பிடிக்காம வீட்டு சமையல் சுவையில் கொடுக்கிற ஹோட்டலுக்கு வந்த கூட்டம்தான் இது.

(எல்லாரும் சிரிப்பு)

விஷயம்: அதாவது வீட்டு சமையல் பிடிக்காதவர்களும்; வீட்டு சமையல் சுவையில் சாப்பிட வந்தவங்களும் ஒரே ஆளா.

(சிரிப்பு)

சாதுரியன்: சரி உள்ள என்ன ஆர்டர் பண்ணலாம்?

சத்தியன்: வெளிய வெச்சு, இன்றைய ஸ்பெஷல் **board**அ வாசிப்போம். இங்கயே செலெக்ட் பண்ணிடலாம்.

**(நால்வரும் boardஐ வாசிக்கின்றனர்)**

**(வஞ்சிரம் fry, இறால் தொக்கு, சுறா புட்டு, நெத்திலி fry, ஐய்ர மீன் கொழம்பு)**

சாதுரியன்: டேய் நான் கேள்விப்பட்டிருக்கேன். யூத ரபிமார்கள் அல்லது வீட்டுல பெரியவங்க ஓய்வுநாள் அன்னைக்கி மீன் விரும்பி சாப்பிடுவாங்களாமே. அதுவும் கண்ண சாப்பிடுவாங்களாமே உண்மையா?

விஷயம்: ஆமாடா உண்மைதான் நானும் வாசித்திருக்கிறேன். அதாவது மீன் மட்டும் உயிரினங்கள்ள செத்த பிறகும் கண்ண மூடாது. மேலும் அதுக்கு தீமையான கண்கள் கிடையாது என்ற நம்பிக்கை அதனாலதான். (தேவன் எப்பொழுதும் நம்மல பாத்துட்டு இருக்காரு என்பத நினைவுகூர). மேலும், மீன் அப்படிங்கறதுக்கு அர்த்தம் "மகிழ்ச்சி" அப்படினு எபிரேய மொழியில இருக்கு. ஓய்வு நாள மகிழ்ச்சியா மகிமையா கொண்டாடனும்னு ஏசாயா 58:13, 14இன் படி அத நினைவுக்கூருறாங்க.அது மட்டும் இல்ல இன்னும் இருக்கு. அதையும் சொல்லுறேன். சிருஷ்டிப்பில் ஐந்தாவது நாள் முதல் உயிரினமா படைச்சது மீன் தான். ரெண்டாவது, ஆறாவது நாள் படைத்தது மற்ற உயிரினங்கள், மனிதர்கள். மூன்றாவது, ஏழாவது நாள் ஓய்வு நாள். இந்த மூணு மட்டும்தான் ஆண்டவர் ஆசீர்வதிச்சாரு. இந்த மூணையும் இணைத்தால் மும்மடங்கு ஆசீர்வாதம் அப்படின்னு சொல்றாங்க. ஆரோனின் ஆசீர்வாதத்திலேயும் மூணு ஆசீர்வாதம் இருக்கும். அது மட்டுமா? மீனுக்கு எபிரேய எண்ணியல்படி ஏழு வருது. அதனால அவங்க ஓய்வு நாளுல சாப்பிடுறாங்க.

சாதுரியன்: ஓ இவ்வளவு இருக்கா சங்கதி.

ரகசியம்: நான் இன்னைக்கு சுறா புட்டு சாப்பிட்டு பார்க்கப் போகிறேன்.

சத்தியன்: டேய் இது புள்ள பெத்த பொம்பளைங்க சாப்பிடறது.

(எல்லோரும் சிரிப்பு )

ஆனா, நான் அதை சாப்பிடப் போவதில்லை. ஏன்னு கேட்காத, நான் பதில் சொன்னா எல்லாரும் இறையியல் பேச ஆரம்பிச்சிடுவீங்க. அதனால அது வேண்டாம்.

சாதுரியன்: சும்மா சொல்லு

சத்தியன்: வேண்டாம். வேண்டாம்.

விஷயம்: பேசாம விட்டது சரி தான். ஏன்னா பைபிள் தெளிவா சொல்லுது "செதிலும், செவுலும்" இல்லாததைச் சாப்பிட வேண்டாம் (உபா. 14:9). அதுல விளக்கம் இல்லைன்னாலும், விளக்கத்தைத் தேடினா அறிவியல் தெளிவா சொல்லுது, அதாவது செதிலும், செவுலும் இல்லாதது மனிதர்கள் சாப்பிட ஏற்புடையது அல்ல. ஒரு சில நன்மைகள் இருந்தாலும் உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடியது அதிகமுன்னு சொல்றாங்க. மேலும் அப்படிப்பட்ட நீர் உயிரினங்கள் கடல் நீரை தூய்மையா வச்சிருக்கிறதற்கும், மீன் கழிவுகளை அல்லது இறந்த மீன சாப்பிடுவதற்கும் வைக்கப்பட்டதுன்னு சொல்றாங்க, சுருக்கமா **Scavenger item**ன்னு சொல்றாங்க.

சத்தியன்: ஓ... நம்ம சொன்னா இது நியாயப் பிரமாணம், நீதிச் சட்டம் இஸ்ரவேலருக்கு மட்டும் தான் நமக்கு இல்ல. நம்ம எல்லாத்தையும் சாப்பிடலாம். பேதுருவுக்கு தரிசனத்துல ஆண்டவர் எல்லாமே சாப்பிட சொல்லிட்டாருன்னு எல்லாம் தெரிஞ்ச மாதிரி அடிச்சு ஓட்டுவாங்க.

விஷயம்: எல்லாம் தெரிஞ்ச மாதிரி இல்லடா, இறால் மேல உள்ள பிரியத்துல சொல்லுவாங்க.

**(எல்லோரும் சிரிப்பு)**

அதுவும் இறால் "அதுக்கு" நல்லது

சாதுரியன்: அதுனா

விஷயம்: யாராவது இவனுக்கு புரிய வையிங்களேன்டா

சத்தியன்: அதாவது, ஒன்னு தெரியுமா? செதில் **(scale)** உள்ள எல்லா மீனுக்கும் சிறகு / துடுப்பு **(fins)** இருக்கும். ஆனா துடுப்பு **(fins)** இருக்கிற எல்லா மீனுக்கும் செதில் **(scale)** இருக்காது.

சாதுரியன்: ஓ அப்படியா !

சத்தியன்: அதாவது செதில் **(scale)** என்பது நேர்மையை **(Quality of Integrity)** குறிக்கும். ஆனா, துடுப்பு **(fins)** இலட்சியத்தை **(Ambition)** குறிக்கும். அதாவது நேர்மையாய் வாழ்றவங்களுக்கு இலட்சியம் இருக்கும். அதுக்குன்னு இலட்சியத்தோடு வாழ்றவங்கெல்லாம் நேர்மையாய் இருப்பாங்கன்னு சொல்ல முடியாது. அதுபோலத்தான் மீனும். இஸ்ரவேலுல இன்னைக்கும் தங்களுடைய புத்தாண்டு **Rosh Hashanah** அன்னைக்கு மீன் முக்கிய உணவா இருக்கும்.

சாதுரியன்: ஆமா ! நம்ம சாப்புடுற சாப்பாடு எல்லாமே நம்ம வாழ்க்கையில பிரதிபலிக்கும்ன்னு சொல்றாங்க. உண்மையா?

விஷயம்: **100%** உண்மை. டேய், **New Year message**க்கு மீனை வச்சி **message** எடேன். புத்தாண்டுல எப்படி வாழணும்னு சொல்ல வேண்டியதுதானே...

ரகசியம்: ஏற்கனவே சாப்பாட்டுல கைவச்சீட்டீங்க. இப்ப ரெண்டாவது இதுலயுமா.

**உள்ளே இருந்து.ஹோட்டல் சூப்பரவைசர். (சத்யன் SIR......).**

சாதுரியன்: **SIR** வார்த்தைய கேட்டாலே பயமா இருக்கு. இடமிருக்குன்னு சொல்ல போறானா. இல்ல உங்களுக்கு இடம் இல்லைன்னு சொல்லப்போறானா?

**(நால்வரும் சிரித்துக்கொண்டே) உள்ளே போகின்றனர்.**

ரகசியம்: எவ்வளவு பெரிய கிறிஸ்மஸ் **tree.** சூப்பர்ஆ இருக்குல்ல. ஓனர் கிறிஸ்டியனா இருப்பாரோ?

சத்தியன்: கிறிஸ்மஸ் ட்ரீ வைக்கிறதுக்கு எதுக்குடா கிறிஸ்தவரா இருக்கணும் .

**(சாப்பிட்டு விட்டு கலைந்து போகிறவர்கள், பிறகு எப்பொழுது, எங்கே சந்திக்கப் போகிறார்கள்? என்று தெரியவில்லை. சந்தித்தால் அதை கேரீத் வாசகர்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.)**

FELLOWSHIP LUNCH

Mr. Isaac Kamalesh



# ராஜாக்களின் ஊழியம் - தாவீது

Rev. Daniel Gnanapragasam



*King is a chief ruler, one invested with supreme authority over a nation, tribe or country.*

“தேவன் பூமியனைத்திற்கும் ராஜா” (சங். 47:6-8). உலகிலுள்ள எல்லா அதிகாரங்களும் தேவனாலே நியமிக்கப்படுகிறது (ரோமர் 13:1(b)). அந்தப்படியே ராஜாக்களும் கடவுளால் நியமிக்கப்படுகிற கடவுளின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். என்னாலே ராஜாக்கள் அரசாளுகிறார்கள், பிரபுக்கள் நீதிசெலுத்துகிறார்கள். என்னாலே அதிகாரிகளும், பிரபுக்களும், பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளும் ஆளுகை செய்துவருகிறார்கள்” நீதி. 8:15, 16.

அவர்கள் கடவுளின் ஞானத்தின்படி, கடவுளின் மக்களை ஆளுகைச் செய்து, கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றும் பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள். வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்ட இஸ்ரவேலர்கள் கடவுளை மறந்து, மற்ற ஜாதியாரிடத்தில் இருப்பது போல தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் என்று கோரியதால் சவுல், சாமுவேல் தீர்க்கதரிசியால் முதல் ராஜாவாக அபிஷேகிக்கப்பட்டார் (1 சாமு. 8:5). ஜனங்களின் பார்வைக்கு தோற்றத்தில் சிறந்த ராஜாவாக (1 சாமு. 9:2) அறிமுகப்படுத்தப்பட்ட சவுல் ராஜா கடவுளின் வார்த்தைக்கு கீழ்ப்படியாததால் நிராகரிக்கப்பட்டார். இவ்வாறு சவுலின் தோல்வியில் தாவீது ராஜாவின் தெரிந்து கொள்ளுதல் ஆரம்பமாகிறது (1 சாமு. 13:14).

“அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்” (தானி. 2:21). தாவீது ராஜாவின் தெரிந்துகொள்ளுதல் மூலம் கர்த்தர் தம்மை அண்ட உலகங்களையும் ஆளுகை செய்யும் ராஜாதி ராஜாவாக நிலை நிறுத்துகிறார். இஸ்ரவேலை ஆட்சி செய்த மொத்தமான 44 ராஜாக்களில் தாவீது ராஜா சிறப்பு வாய்ந்தவர். இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு பட்டியலில் எத்தனையோ ராஜாக்கள் இருந்த போதிலும் தாவீதின் பெயர் மட்டும் தாவீது ராஜா (மத். 1:6) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சவுல் ராஜா ஆட்சி செய்த 2ஆம் வருடத்தில் தாவீது பிறப்பதற்கு 8 வருடங்களுக்கு முன்பதாகவே (அப். 13:21, 2 சாமு. 5:4) கர்த்தர் தாவீதைக் கட்டளையிட்டார் என்பது தெளிவாகிறது.

### தாவீதின் சிறப்பு தெரிந்து கொள்ளுதல்: ஏன்?

#### *i. God Predefined David as His Beloved One:*

கர்த்தர் சவுலை ராஜாவாக அனுமதித்ததற்கு ஒரு திட்டம் இருந்தது. அது இஸ்ரவேலர்களுக்கு எதிரிகளாக இருந்த எல்லா ஜாதிகளையும் முறியடித்து சங்காரம் செய்வதற்காகவே (உபா. 7:2). ஆனால் சவுலோ அவர்களுக்கு இரங்கவும், இச்சிக்கவும் வேண்டாம் என்ற எச்சரிப்பை மறந்து, கீழ்ப்படியாமல் அமலேக்கை தப்பவிட்டதினால் (1 சாமு. 15:9) ராஜாவாயிராதபடிக்கு புறக்கணிக்கப்பட்டான். அவனுக்குப் பதிலாக கர்த்தருக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருத்த (சங். 139:22) தாவீதை கர்த்தர் தம் இருதயத்திற்கு ஏற்றவனாக, தமக்குப் பிரியமானவனாகத் தெரிந்து கொண்டார் (அப். 13:22).

#### *ii. God predesigned David as His Loyal Shepherd:*

மேய்ப்பன் என்ற சொல் தலைமைத்துவத்தை அடையாளப்படுத்துகிறது. பராக்கிரமசாலியான கீசின் குமரனான சவுல், தொலைந்து போன தன் தகப்பனின் கழுதைகளைத் தேடிச் செல்வதில் அசதியாயும், அசட்டையாயும் செயல்பட்டான் (1 சாமு. 9:5). ஆனால் தாவீதோ, தன் தகப்பனின் ஆடுகளின் மீது அன்பும், அக்கறையும் கொண்டு சிங்கத்திற்கும், கரடிக்கும் ஆடுகளைத் தப்புவிக்கும் சிறந்த மேய்ப்பனாயிருந்தான் (1 சாமு. 17:34, 35).

### *iii. God previewed David as His Anointed King:*

வெளிப்புறமாக அபிஷேகிக்கப்படும் அடையாளம், கடவுளுடைய ஆவியினால் உள்நோக்கி அளிக்கப்படும் அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. அது தெய்வீக அதிகாரத்தோடு இஸ்ரவேலை வழிநடத்த சவுலுக்கு அழைப்பு கொடுத்தது. சவுலின் பெருமையானது தாவீதின் மேல் பொறாமை கொள்ளச் செய்து, அபிஷேகத்தை இழந்து போகச் செய்தது (1 சாமு. 8:7-10). ஆனால் தாவீதோ, தனக்கு அளிக்கப்பட்ட அபிஷேகத்தினால் புத்திமானாகவும், சவுலிடம் பெருந்தன்மையாகவும் நடந்து கொண்டான் (1 சாமு. 26:23-25).

இத்தகைய சிறப்புமிக்க தெரிந்துக்கொள்ளுதலினால் ராஜாவாக்கப்பட்ட தாவீது, இஸ்ரவேல் தேசம் மீதும், இஸ்ரவேல் மக்கள் மீதும் ஆளுகையைத் தந்த ராஜாதிராஜாவுக்கு செய்த ஊழியங்களை இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

### I. Unifying the tribes:

சவுலின் மரணத்திற்குப் பின்பு தாவீது இஸ்ரவேலின் மூப்பர்களால் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக்கப்பட்டார். தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடே கூட இருந்தார் (2 சாமு. 5:10). தாவீது சென்ற இடமெல்லாம் கர்த்தர் அவனுக்கு வெற்றியைத் தந்தார். இதன் மூலம் இஸ்ரவேலில் ஒற்றுமையை நிலைநாட்டினார். தன்னுடன் நட்பாக இருந்தவர்களுக்கு மாத்திரமல்ல, சவுலின் குடும்பத்தாருக்கும் தயவு பாராட்டினார். பட்சபாதமின்றி தன்னுடைய எல்லா ஜனத்திற்கும், நியாயமும், நீதியும் செய்து வந்தான் (2 சாமு. 5:10).

### II. Conquering Jerusalem:

சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவான பின்பு தாவீது எபூசியர் மேல் யுத்தம் பண்ணி, எருசலேமைக் கைப்பற்றி, அதைத் தலைநகரமாக நிறுவி, சுற்றிலும் மதிலைக் கட்டி பாதுகாப்பை அதிகரித்தார் (2 சாமு. 5:9). சுமார் 400 வருடங்களுக்கு முன்பு கர்த்தர் மோசேக்குக் கொடுத்த உடன்படிக்கையை (யாத். 15:17) தாவீது மூலம் நிறைவேற்றினார். எருசலேமானது கடவுள் தங்க விரும்பும் வாசஸ்தலம் (சங். 132:13, 14), அது சமாதானத்தின் அடையாளம் (சங். 122:3). கடவுள் தம் மக்களுக்கு வழங்கும் பாதுகாப்பான அடைக்கலமாக இது உறுதிசெய்யப்படுகிறது.

### III. Bringing the Ark of the Covenant:

கர்த்தருடைய வாக்கின்படியே சவுலின் ராஜ்யபாரம் அவன் கையிலிருந்து பறிக்கப்பட்டு தாவீதுக்கு கொடுக்கப்பட்டது (1 சாமு. 28:18). கடவுளின் வழிகாட்டும் கருவியாக செயல்பட்ட உடன்படிக்கைப் பெட்டியை சவுல் மறந்ததினால் தண்டிக்கப்பட்டார் (1 நாளா. 10:13, 14). ஆனால் தாவீதோ, சவுலின் நாட்களிலே தேடாதேபோன உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வரும்படி செய்தான் (2 சாமு. 6:17). கடவுளின் பிரசன்னமாக அறியப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியை (யாத். 25:8) கொண்டு வருவது என்பது அடிப்படையில் கடவுளைத் தேடுவதாகும். அது அனைத்து இஸ்ரவேல் மக்களும், கடவுளுடனான தங்கள் உறவைப் புதுப்பித்துக்கொள்ளும் அழைப்பாகவும், அவரது வழிகாட்டுதலின்படி நடந்துகொள்ளும் (எண். 10:33-36) அறிவுறுத்தலாகவும் கொடுக்கப்பட்டது.

பிரியமானவர்களே! தாவீது தனது நீதியும், நியாயமுமான செய்கைகளினால் பழிவாங்குதலும், பட்சபாதமும் இன்றி இஸ்ரவேல் மக்களை ஒன்றிணைத்தான். ஒன்றிணைந்த மக்கள் பாதுகாப்பாகவும், பரிசுத்தமாகவும் வாழும் பொருட்டு, எளிதில் அணுக முடியாத பர்வத நகரமாகிய எருசலேமைக் கைப்பற்றி, அதை பலப்படுத்தி பாதுகாத்தான். பாலைவன பிரயாணத்திலும், இஸ்ரவேலின் பாளையத்திலும் "கடவுளின் பிரசன்னமாக" வலம் வந்த உடன்படிக்கைப் பெட்டியை எடுத்து வரச்செய்து, அதை பரிசுத்த ஆலயத்திற்குள் பிரவேசிக்கச் செய்ய பிரயாசப்பட்டான். இதன் மூலம் பிரித்தெடுக்கப்பட்ட கடவுளின் ஜனங்கள், கடவுளின் பரிசுத்த நகரத்தில், கடவுளின் பிரசன்னத்தில் வாழ வேண்டும் என்ற உன்னத ஊழியத்தை தாவீது ராஜா தனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் நிறைவேற்றினார்.

தாவீதின் வேரும், சந்ததியும் பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிற நித்திய ராஜாவாகிய நமது ஆண்டவராகிய கர்த்தர், நம்மெல்லோரையும் அவருடைய பிள்ளைகளாக, அவருடைய பரிசுத்த நகரமாகிய பரம எருசலேமுக்குள், அவருடைய பிரசன்னத்திற்குள் அழைத்துச் செல்லும்படியாக "மேசியாவாக" பிறந்தார் (ஏசாயா 9:6). ராஜாவாக ஆட்சி செய்ய தாவீது முன்குறிக்கப்பட்டது போல நித்திய ஆட்சி செய்ய நமது கர்த்தரும் முன்குறிக்கப்பட்டுள்ளார். "கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்திற்கு முடிவிராது (லூக்கா 1:32). பெரிய தாவீதாகிய நமது ஆண்டவரின் நித்திய ஆளுகைக்குள் பிரவேசிக்க நாம் ஆயத்தமா? சிந்தித்துப் பார்த்து இந்த அட்வென்ட் (Advent) காலத்தை எதிர்கொள்ள ஆயத்தப்படுவோம். ஆமென்!




கேட்ட கேள்விக்கு நச்சுன்னு ஒரு பதில்

Mrs. Jeba Saral

Hello செல்வங்களே!! Happy Christmas and Blessed New year to you all!! இவ்வாண்டு முழுவதும் நம்மை வழிநடத்தி வந்த தேவனை நாம் துதிப்போம்!! நீங்க எல்லாரும் கர்த்தருக்குள் சந்தோஷமாகவும், அவருடைய பிள்ளைகளாகவும் இருக்கிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த உலகில் எல்லாருக்கும் எப்படியாவது பணக்காரர்களாக மாறிவிட வேண்டும் என்ற ஆசையிருக்கிறது. ஒரு நல்ல வேலையில் அமரவும், குடும்ப தரத்தை உயர்த்தவும், சொந்த வீடு கட்டவும் தான், நாம் நம்முடைய பணத்தை அதிகமாக செலவழிக்கிறோம். அப்போ இவர்கள் எல்லாரும் முட்டாள்களா?

எந்த ஒரு காரியத்தையும் நாம் வேதாகமத்தின் அடிப்படையில் தான் முடிவு செய்ய வேண்டும். அதுதான் ஒரு நல்ல கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அடித்தளம். அப்படி நாம் வேதாகமத்தை பார்க்கும் பொழுது நாம Titleல பார்த்த மாதிரி தான் "பணக்காரன் ஒரு முட்டாள்"! சரி வாங்க அது எப்படின்னு பார்ப்போம். நீதி. 28:11இல், **"ஐசுவரியவான் தன் பார்வைக்கு ஞானவான்; புத்தியுள்ள தரித்திரனோ அவனைப் பரிசோதிக்கிறான்"** என்று பார்க்கிறோம். எனவே பணக்காரன் பார்வைக்கு தான் ஞானவான்!! மேலும் யாக்கோபு 5:3இல் நாம் பார்க்கும் போது **"உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளில் உள்ள துரு உங்களுக்கு விரோதமாக சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்"** என்று நாம் வாசிக்கிறோம். பணக்காரன் சேர்த்துவைத்தது, அவனுக்கே தீங்கு விளைவிக்கிறதாய் மாறி விடுகின்றது என்பதை நாம் இங்கே காணலாம். மனித வரலாற்றிலேயே மகா ஞானியாயிருந்த சாலொமோன் கூட, ஆண்டவரே! என்னை பணக்காரனாக மாத்திரம் ஆக்கிவிடாதீர் என்று ஜெபிக்கிறான். (நீதிமொழிகள் 30:7-9) ஏனென்றால் "தேவன் யார்" என்று கேட்கக்கூடிய அளவுக்கு நாம் சென்றுவிடுவோமோ என்ற பயத்தில் அப்படி ஜெபிக்கிறான். இப்பொழுது இருக்கிற நிறைய பணக்காரர்கள் கூட அப்படித்தான். பல ஏழை எளியோர்களின் பணத்தை அநியாயமாய் பறித்து, சரியான சம்பளம் கொடுக்காமல், லஞ்சங்களைப் பெற்று, பொன்னையும், பொருளையும், வீடுகளையும் சம்பாதிக்கின்றனர். ஆனால் கடைசி காலங்களில் அவர்களுக்கு மிஞ்சுவது ஏமாற்றமே. பணக்காரர்களின் பிள்ளைகள் பணத்தின் அருமையை அறிவதில்லை, ஆடம்பரமாய் வாழ்ந்து தங்களின் பெற்றோரை மதிப்பதில்லை. இவ்வாறு பணக்காரர்கள் முட்டாளாகின்றனர்.

நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்துகிறதாய் ஐசுவரியம் இருக்கிறது. ஐசுவரியவான் விசுவாசத்தை விட்டுவிலகிப் போகிறான் என்று நாம் வாசிக்கிறோம். விசுவாசத்தை விட்டு விலகச் செய்கிற ஐசுவரியம் நமக்கு வேண்டுமா? சிந்தித்துப் பார்ப்போம்!! மேலும் **ஐசுவரியம் நிலையில்லாதது** என்று நாம் வேதாகமத்தில் காண்கிறோம். இந்த நிலை இல்லாத பொருளுக்காக பலர் வாழ்நாள் முழுவதும் உழைக்கின்றனர். நீயும் நானும் எதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறோம்?? சிந்தித்துப் பார்! பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது, ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள் (சங். 62:10). கவிஞர் வைரமுத்து கூறுகிறார், "கையில் காசு இருந்தால், நீ அதற்கு எஜமான். கழுத்து வரைக்கும் காசு இருந்தால், பணம் உனக்கு எஜமான்!! எவ்வளவு உண்மை!!

நீங்க இப்ப கேட்கலாம், அக்கா! அப்போ நம்ம பணக்காரங்களாவே ஆகக்கூடாதா? ஏன் ஆபிரகாம் கூட தான் ஐசுவரியவானாய், செல்வ சீமானா இருந்தார்? அப்போ அவங்க எல்லாரும் முட்டாளா? அப்படின்னு. தம்பி, தங்கச்சி, நான் சொல்ல வரத கவனமா கேளுங்க. நீதி. 10:22இல, **"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்;** அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்". மேலும் தேவன், எப்பொழுது நமக்கு ஐசுவரியம் தருகிறார் தெரியுமா? நீதி. 22:4இல் **"தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்".** அதனால தேவன் விசுவாசத்தை விட்டு விலகிப் போகிற ஐசுவரியத்தை ஆபிரகாமுக்கு கொடுக்காமல்; தாழ்மைக்கும், கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் பரிசாய் வந்த ஐசுவரியத்தையே ஆபிரகாமுக்கு கொடுத்ததினால், அவன் விசுவாசத்திற்கே தகப்பனானான். இப்போ தெளிவா உங்களுக்கு புரிஞ்சியிருக்கும்னு நான் நம்புறேன். அதனால நீ எப்படிப்பட்ட ஐசுவரியத்தைப் பெறப் போகிறாய்? தீர்மானித்து, செயல்படு. அடுத்த வருடம் உங்களை சந்திக்கும்வரை தேவன் உங்களை அபரிவிதமாக ஆசீர்வதித்து, அவருடைய வழிகளில் உங்களை நடத்துவாராக. ஆமென்!

# பணித்தளங்களில் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் – ஓர் அலசல்

### மாலர்கள் என அடையாளப்படுத்தும் மால்தோ மக்கள்:

இவர்களுக்கு இயேசுவை அறிமுகப்படுத்திய முக்கிய பொறுப்பு நமது முன்னோடி மிஷனெரிகளையே சாரும். தமது பிறப்பின் நாட்களையே அறிந்திராத இம்மலை மக்களுக்கு கிறிஸ்து பிறப்பின் புரிதலும், அறிதலும் அதிகக் கடினமே. கிறிஸ்து பிறப்பை இவர்களுக்கு அறிமுகப்படுத்திய போது கிறிஸ்துவை மனதில் ஏற்றுக்கொண்டு, கிறிஸ்து பிறப்பை ஒரு சிறப்பான நாள், "பெரிய நாள்" (படா தீன்) என பெயர் சூட்டி அகமகிழ்ந்தனர். பெருமகான் பிறப்பின் பெருமையை மேலும் தம் இனம் அறிந்திட, வேலைத் தேடி வெளியிடம் சென்ற பந்தங்களுக்கு டிசம்பர் மாதம் துவங்குமுன்னே அழைப்பிதழ் அனுப்பப்படும்.

ஆலயம் இல்லாத கிராமங்களுக்கு கால்பந்து மைதானங்களே விழாக்களமாக உருமாறும். கிறிஸ்துமஸ் நாளின் போது துதியும், ஜெபமும், செய்தியும் கேட்போரின் சிந்தையை பிளக்கச் செய்யும். காணிக்கையின் நேரம் கைக்குழந்தைகளின் பிஞ்சு விரல்களும் காணிக்கையேந்தி வரும். மாலர்கள் கொடுப்பதில் கோபுரமானவர்கள். செய்த பொருத்தனைகளைத் தேவனுக்கு மறவாமல் செலுத்தி மகிழ்வர். மக்களின் உள்ளம் மகிழ, குடும்பம் செழிக்க ஜெப தூபம் செலுத்தப்படும். இல்லங்களுக்குச் சென்று இல்லாதோர்க்கு இனிப்பு வழங்கி இயேசுவின் அன்பைப் பகிர்ந்திடுவர்.

### ராட்டியா கவர் மக்கள்:

இவர்கள் இயேசு கிறிஸ்துவை ஒராவன் இன மக்களின் தெய்வம் என்று அழைக்கிறார்கள். வேற்று மதத்தினர் ஒராவன் இன மக்களின் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்தில் பங்குகொள்ள செல்வார்களாகில், அவர்களில் ஒருவரைப் பிடித்து தங்கள் தெய்வத்துக்கு (இயேசு கிறிஸ்து) பலி செலுத்தி, அந்த இரத்தத்தை எடுத்து தங்கள் நிலத்தில் விதைக்கும் நெல் விதையில் கலந்து விதைத்து விடுவார்கள் என பயத்துடன் இருந்தனர். இந்த மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு முதல்முறையாக கிறிஸ்துமஸ் மிகச் சிறிய அளவில் கொண்டாடப்பட்டது. பின்னர் கிராமத்து சிறுவர்களை வைத்து கிறிஸ்து பிறப்பு, நாடகமாக காண்பிக்கப்பட்டதுமன்றி, மற்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அதைக் காண அநேக கிராம மக்கள் வந்தனர். அவர்களுக்கு இனிப்பும், உணவும் வழங்கி, அந்நாள் கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டமாகவும், சுவிசேஷம் அறிவிக்கும் நாளாகவும் அனுசரிக்கின்றனர்.

இயற்கையை பண்டிகையாகவும், தாங்கள் செய்யும் உழவு (ஏர்) தொழிலையே பண்டிகை எனவும் கொண்டாடும் இவர்கள் மத்தியில் ஓர் கூட்டம் நித்திய ஜீவனைத் தந்தவருக்கு பண்டிகை அனுசரித்து வருகிறார்கள்.

### குக்னா இன மக்கள்:

உள்ளூர் மக்களின் மொழியை முழுமையாக அறிந்திராத நம் மிஷனெரிகள் நம்பிக்கையோடும், தைரியத்தோடும் கிறிஸ்துவின் பிறப்பு செய்தியை அறிவித்தனர். 1976ஆம் ஆண்டு துவங்கிய அந்த எளிய நிகழ்வு இன்று ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்கியுள்ளது.

2003ஆம் ஆண்டு ஜலோட் பணித்தளம் கமாடி கிராமத்தில் ஒரு மாட்டுப் பண்ணையில் வைத்து கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. 500க்கும் மேற்பட்ட மக்கள் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாட ஒன்றுக் கூடினர். இது ஆன்மீக எழுச்சியின் வெளிப்பாடாக இருந்தது. விசுவாசிகள் தாங்களே தங்கள் சொந்த மொழியில் கிறிஸ்துமஸ் பாடல்களை இயற்றி, அவர்கள் கலாச்சார நடனங்களுடன் ஆண்டவரைத் துதிக்கத் தொடங்கினர். முன் நாட்களில் மிஷனெரிகள் விசுவாசிகளை வரவேற்றனர். ஆனால் இப்பொழுது விசுவாசிகளே மிஷனெரிகளை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர். இன்று குஜராத் மாநிலத்தில் 253 திருச்சபைகள் வழியாக கிறிஸ்து பிறப்பின் செய்தி பரவிக்கொண்டிருக்கின்றது. சிறிய பழங்குடியின கிராமத்தில் மங்கலாகத் திகழ்ந்த அந்த ஒளி இன்று குஜராத் முழுவதும் பிரகாசிக்கிறது.

### சாந்தலர்கள் என அழைக்கப்படும் சந்தால் இன மக்கள்:


ஜனவரி முதல் மார்ச் வரை "சோகராய்" என்ற பண்டிகையை வருடந்தோறும் கொண்டாடுவர். இதன் சிறப்பு என்னவென்றால் தங்களுடைய சொந்த சகோதர, சகோதரிகளை "சோகராய்" பண்டிகையின் போது அழைத்து, சிறப்பு விருந்து கொடுத்து, குடித்து, வெறித்து மகிழ்வது வழக்கம். இவர்களை நம் மிஷனெரிகள் மாற்றியமைத்து, கிறிஸ்துமஸ் காலத்தில் அவர்கள் மத்தியில் அதே மகிழ்ச்சியைப் பகிர்ந்து, தங்கள் சொந்த ஜனங்களையும், சகோதர, சகோதரிகளையும் வீட்டிற்கு அழைத்து விருந்து செய்யுமாறு போதித்தனர். அதன்படி விசுவாசிகள் ஆண்டவரை அறியாத தனது சொந்த ஜனங்களை அழைத்து, விருந்து கொடுத்து, அத்துடன் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினர்.

அன்று இருளின் மத்தியில் மண்ணெண்ணெய் விளக்கு வைத்து கிறிஸ்துமஸ் ஆராதனை நடைபெற்றது. இன்று மின்சார வசதி வரவே வண்ண விளக்குகளால் அலங்கரித்து இரட்சகரை ஆராதிக்கின்றனர். அன்று பழைய ஆடைகளுடன் எந்த அலங்காரமும் இல்லாமல் கிறிஸ்துமஸ் ஆராதனைக்கு வந்தவர்கள், இன்று வண்ண வண்ண ஆடைகள் அணிந்து, வீடுகளையும், ஆலயத்தையும் அலங்கரித்து கிறிஸ்துமஸ் ஆராதனையில் கலந்து ஆராதிக்கின்றனர். இன்று கிறிஸ்து இரட்சகர் ஒவ்வொரு உள்ளத்திலும் பிறந்திருப்பதை நம் கண்களால் காண முடிகிறது.

### ஜெபக்குறிப்பு:

- ✠ முதன்முதலாக கிறிஸ்து பிறப்பை கொண்டாடும் விசுவாசிகள் மற்றும் அனைத்து மக்களுக்கும் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நடைபெறும் கிறிஸ்துமஸ் ஆராதனை, கீத ஆராதனை, மனன வசனப் போட்டி, கிறிஸ்து பிறப்பு நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் ஆசீர்வாதமாக இருக்க
- ✠ கிறிஸ்துமஸ் பவனியாக ஆண்டவரை அறியாத கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கும் பணிக்காக
- ✠ சோதனைகளையும், போராட்டங்களையும் சகிக்க முடியாமல் பின்வாங்கியுள்ள ஆத்துமாக்கள், கிறிஸ்துவின் அன்பை மீண்டும் ருசிக்க, விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ள
- ✠ நமது பணித்தளங்கள் மற்றும் விடுதிகளில் நடைபெறும் கிறிஸ்துமஸ் நிகழ்வுகளில் தேவ பாதுகாப்பு இருக்க
- ✠ இன்னும் அறியப்படாத 2400 இன மக்கள் மத்தியில் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி அறிவிக்கப்பட, அவர்களும் மெய்த் தேவனை அறிந்திட
- ✠ விசுவாசிகளோடு இணைந்து நிற்கும் மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்காக, இவர்களின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

FIELD - FMPB MRS. VASANTHI EMMANUEL



# இந்தியாவின் கண்ணீர் துளி

## இலங்கை

இந்தியாவின் கண்ணீர் துளி அல்லது கிழக்கின் முத்து என அழைக்கப்படும் இலங்கை, வரலாற்றுரீதியாக சிலோன், அதிகாரபூர்வமாக இலங்கை. ஜனநாயக சோசலிசக் குடியரசு என்பது தெற்காசியாவிலுள்ள ஒரு தீவு நாடு ஆகும். இது இந்தியப் பெருங்கடலில், வங்காள விரிகுடாவின் தென்மேற்கேயுள்ள மன்னார் வளைகுடா, பாக்கு நீரிணை ஆகியவற்றால் இந்தியத் துணைக்கண்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **தலை நகரம்:** | கொழும்பு |
| **நாணயம்:** | இலங்கை ரூபாய் |
| **ஆட்சி மொழிகள்:** | சிங்களம், தமிழ் |
| **தொலைப்பேசிக் குறியீடு:** | +94 |
| **அங்கீகரிக்கப்பட்ட மொழி:** | ஆங்கிலம் |

**அரசாங்கம்:** ஒருமுக பகுதி-ஜனாதிபதிக் குடியரசு

**ஜனத்தொகை:** 2025ஆம் ஆண்டில் இலங்கையின் மக்கள் தொகை சுமார் 23.23 மில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள முக்கிய மதங்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம். பௌத்தம் பெரும்பான்மையினரின் மதமாகும். சுமார் 70.2% மக்கள் பௌத்தர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள். மேலும் இது மாநில மதமாக நியமிக்கப்பட்டுள்ளது. இந்து மதம் இரண்டாவது மிகவும் பரவலாகக் காணப்படும் மதமாகும். அதைத் தொடர்ந்து இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் உள்ளன.

**இலங்கை எதிர்கொள்ளும் பல முக்கிய பிரச்சனைகள் கீழேக் கொடுக்கப்பட்டுள்ளன: இவைகளை மனதில் கொண்டு இலங்கைக்காக ஜெபிப்போம்.**

- **பொருளாதார நெருக்கடி:** நாடு 1948இல் சுதந்திரம் பெற்ற பிறகு, எப்பொழுதும் இல்லாத அளவிற்கு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை அனுபவித்து வருகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளதுடன், மிகப்பெரிய இறையாண்மைக் கடனையும் (SOVEREIGN DEBT) கொண்டுள்ளது.
- **பணவீக்கம்:** 2022இல் பணவீக்கம் சாதனை அளவாக 54.6%ஐ எட்டியது, இதில் உணவுப் பணவீக்கம் 81% ஆக உயர்ந்தது.
- **வறுமை:** 2021 மற்றும் 2022க்கு இடையில் வறுமை கிட்டத்தட்ட இருமடங்காக உயர்ந்து 13%லிருந்து 25% ஆக அதிகரித்தது.
- **மனித உரிமை மீறல்கள்:** அரசாங்கம் கருத்து வேறுபாடுகளை (DISSENT) அடக்குவதாகவும், கருத்துச் சுதந்திரம் மற்றும் கூடும் சுதந்திரத்தை (FREEDOM OF EXPRESSION AND ASSEMBLY) கட்டுப்படுத்துவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
- **பொறுப்புக்கூறல் (Accountability):** உள்நாட்டுப் போர் உட்பட கடந்த கால மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறல் குறைவாக உள்ளது.
- **பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகள்:** நாட்டில் கருக்கலைப்புக்கு எதிராக கடுமையான சட்டங்கள் உள்ளன. மேலும் குழந்தைத் திருமணத்தை அனுமதிக்கிறது.
- **காலநிலை தொடர்பான பேரழிவுகள்:** இலங்கை வெள்ளம், மண்சரிவுகள், சூறாவளிகள் மற்றும் வறட்சி போன்றவற்றுக்கு ஆளாகக்கூடியது. இவை மில்லியன் கணக்கான மக்களைப் பாதித்துள்ளது.
- **விவசாய சவால்கள்:** நாட்டின் விவசாயத் துறை பொருளாதார நெருக்கடி, காலநிலை மாற்றம் மற்றும் தோல்வியடைந்த இயற்கை விவசாய பரிசோதனை (ORGANIC FARMING EXPERIMENT) ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.
- **உணவுப் பாதுகாப்பின்மை (Food Insecurity):** 5.3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் (மக்கள் தொகையில் 24%) உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர்.
- **சுகாதாரம்:** மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது.
- **புவிசார் அரசியல் பதட்டங்கள் (Geopolitical Tensions):** இலங்கையின் பொருளாதார நெருக்கடி பிராந்தியத்தில் புவிசார் அரசியல் போட்டியை அதிகரித்துள்ளது.



Ms. Beulah Baskar

மிஷனெரி பணியில் நம் கால மனிதர்

# Rev.T. ஆல்பின்



**துவக்கம்:**

நான் 1971ஆம் ஆண்டு குமரி மாவட்டத்திலுள்ள கஞ்சிக்குழி கிராமத்தில் கர்த்தருக்குப் பயப்படுகின்ற குடும்ப பின்னணியத்தில் பிறந்து வீட்டாராலும், சபையாராலும் கிறிஸ்துவுக்குள் வளர்க்கப்பட்டேன். 8ஆம் வகுப்பு படிக்கும்போது நடந்த சபையின் விசேஷ கூடுகையில், நான் பாவி என்று உணர்ந்து அறிக்கையிட்டு மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள்ளாக வாழ தீர்மானித்தேன்.

**ஊழியதுவக்கம்:**

8ஆம் வகுப்பு படிக்கும்போது எனது ஓய்வு நாள் பள்ளி ஆசிரியர் திரு. ஜான் பெர்லமனோடு இணைந்து வண்டவிளை கிராமத்தில் கிறிஸ்துவை அறிவிக்க கடந்து சென்றோம், அதன் விளைவு இன்று அது ஆலயம் உள்ள கிராமமாக மாறியுள்ளது. அப்போதே கர்த்தர் என்னை அவருடைய ஊழியத்திற்காக அழைத்தார் என்பதை உறுதி செய்து கொண்டேன்.

**படிப்பும் வேலையும்:**

என்னுடைய DME பட்டப்படிப்பை முடித்த பின் வேலைக்காகப் பாண்டிச்சேரி சென்று, 1991 முதல் 1995 வரை ஆரோ எலேக்ரானிக்ஸ் கம்பெனியில் உதவி உற்பத்தி தள மேலாளராக வேலைப் பார்த்து வந்தேன்.

**முழுநேர ஊழிய அழைப்பு:**

பாண்டிச்சேரி நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் வாலிப ஜெபக்குழுக்களை நடத்தி தன்னார்வமாக பணிச்செய்து கொண்டிருக்கும்போது. 1995ஆம் ஆண்டு மே மாத வாலிபர் முகாமில் முழுநேர மிஷனெரிப் பணிக்காக என்னை ஒப்புக்கொடுத்தேன்.

**மிஷனெரிப்பணி:**

1995இல் வடக்கு பீகாரில் மூஜபர்பூர் பட்டணத்தில் மிஷனெரிப் பயிற்சி முடித்தேன். 1996 ஜூன் முதல் 2012 அக்டோபர் வரை சத்தீஸ்கார் மாநிலத்தில் முன்னோடி மிஷனெரி அருள்திரு. கருணாகரன், அருள்திரு. டேனியல் டேவிட், திரு. ஜெபதுரை மற்றும் பல மிஷனெரிகளோடு இணைந்து ஒராவன் மக்கள் இனக்கூட்டத்தைக் கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்த, ராய்காட், ஜஸ்பூர், அம்பிகாபூர் மாவட்டங்களில் கிராமந்தோறும் சுவிசேஷம் அறிவிக்க கர்த்தர் உதவி செய்தார். 2004இல் CNI - சோட்டா நாக்பூர் திருமண்டலத்தால் குருத்துவ பட்டம் பெற்றேன்.

**குடும்ப வாழ்க்கை:**

1999ஆம் ஆண்டு மே மாதத்தில் என்னைப்போல மிஷனெரிப்பணிக்காக தன்னை அர்ப்பணித்து 1996 முதல் ஜார்க்கண்ட் மாநிலத்தில் மால்தோ இன மக்கள் மத்தியில் மருத்துவக் குழுவில் இணைந்து பணிச் செய்து வந்த திருமதி. விஜயராணி அவர்களை திருமணம் செய்துக் கொண்டேன். நாங்கள் சத்தீஸ்கார் மாநிலத்தில் பணிச்செய்து வந்தோம். கர்த்தர் எங்களுக்கு எப்சிபா, எமீமா, எவாஞ்சலீன் என்ற மூன்று பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் உதவியால் நானும், என் மனைவியும் 2011இல் UBS - PUNEஇல் M.Div. இறையியல் படிப்பை நிறைவு செய்தோம்.

**தொடர் மிஷனெரிப்பணி:**

2012 அக்டோபர் முதல் 2015 அக்டோபர் வரை உத்கல் ஒடிசா பிராந்தியத்தில் ஹோ, சந்தால், ஜுவாங் மக்கள் கூட்டங்களில் பணித்தள ஒருங்கிணைப்பாளராகப் பணிச் செய்தேன். 2015 நவம்பர் முதல் 2019 ஏப்ரல் வரை பஞ்சாப், ஜம்மு, ஹிமாச்சல் பகுதிகளில் வட மேற்கு மண்டல பணித்தள ஒருங்கிணைப்பாளராகப் பணி செய்தேன். 2019 மே முதல் 2024 ஏப்ரல் வரை தமிழ் நாட்டில் உள்ள மிஷனெரி மண்டலப் பணித்தள ஒருங்கிணைப்பாளராகப் பணிச் செய்தேன். 2024 மே மாதம் முதல் இதுவரையும் குமரி மாவட்டப் பிராந்திய விரிவுப்பணி பொறுப்பாளராகப் பணி செய்து வருகிறேன்.

**மிஷனெரி பணி அனுபவத் துளிகள்:**


1996ஆம் ஆண்டு இளம் மிஷனெரியாக சத்தீஸ்கர், ராய்காட் மாவட்டம், செனமா கிராம மக்கள் காலரா நோயால் மரித்து கொண்டிருக்கும்போது மக்களோடு தங்கி, ஜெபித்து பலரை மரணத்திலிருந்து காப்பாற்றியதோடு அங்குள்ள பக்கத்து கிராமங்களுக்கும் சுவிசேஷம் அறிவித்து, திருச்சபை நிலைநாட்ட கர்த்தர் உதவி செய்தார். 1998ஆம் ஆண்டு சத்தீஸ்கர், ராய்காட் மாவட்டம், ஷாஜாபள்ளி கிராமம் புதிய விசுவாச குடும்பத்திலுள்ள சிந்து எக்கா செரிபரல் மலேரியாவினால் மரித்து, ஜெபத்தினால் பல மணி நேரத்திற்கு பின் உயிரோடு எழும்பி, நமது விடுதியில் படித்து இன்று செவிலியராக பணிச்செய்து கொண்டிருக்கிறார்.

2003இல் லைலுங்கா கிராமத்தில் திரு. ஆரோன் (உடன் மிஷனெரி) என்ற மிஷனெரியோடு சேர்ந்து சுவிசேஷம் அறிவித்து 32 பேருக்கு திருமுழுக்குக் கொடுத்து முடித்தபோது, எதிர்பாளர்களால் துன்புறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போது, ஜெபக்குழுக்களின் ஊக்கமான ஜெபத்தினால் அற்புதமாக மறுநாள் விடிவிக்கப் பட்டோம். 2014ஆம் ஆண்டு ஜார்க்கண்ட் மாநில, ஜகனாத்பூர் பணித்தளத்தில் சுவிசேஷம் அறிவித்தபோது கிராம மக்களால் 101 முறை தோப்பு கர்ணம் போடும் தண்டனையைப் பெற்றோம். மேலும் அக்கிராமத்திலிருந்து விரட்டப்பட்டோம். இன்று அந்த கிராமத்தில் திருச்சபைக் கட்டப்பட்டுள்ளது. அல்லேலூயா.

**உங்கள் ஜெபம் வேண்டி:**


- இன்று எங்களை யார் விடுதலை செய்வார் என ஏங்கும் திரள் கோடி ஜனங்களுக்கு, நம் பகுதியிலிருந்து திரள் திரளாக மிஷனெரிகள் கடந்துச் செல்ல ஜெபிப்போம்.
- நமது கிறிஸ்தவ வாலிபர் கூட்டம் - மிஷனெரிப் பணிகளில் தங்கள் தாலந்துகளைப் பயன்படுத்த ஜெபிப்போம்.
- எனக்காகவும், என்னுடைய குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**அநேக வாலிப ஜெபக் குழுக்களை எழுப்புவோம் - தேசத்தை கிறிஸ்துவுக்கு ஆதாயமாக்குவோம்.**



# நடுக்குவாதம்

## PARKINSON'S DISEASE




பார்கின்சன் நோய் (நடுக்குவாதம்) என்பது மூளை மற்றும் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் ஒரு நோயாகும். இதில் டோபமைன் (DOPAMINE) என்னும் வேதிப்பொருளை உருவாக்கும் மூளை நரம்பு செல்கள் (NEURONS) இறக்கவோ அல்லது சரியாக இயங்காமலோ போகின்றன. டோபமைன் என்பது உடல் இயக்கங்களை மென்மையாகக் கட்டுப்படுத்த உதவுகிறது.

**டோபமைன் குறைவதால், பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பின்வரும் அறிகுறிகள் காணப்படும்:**

- முகபாவனை வெளிப்படுத்த இயலாமை (MASKED FACE)
- உடல் நடுக்கம் (RESTING TREMORS)
- மெதுவான, குறுகிய இடைவெளியோடு நடத்தல் (SHORT SHUFFLING GAIT)
- ஒரேநேரத்தில் நடக்கவும், பேசவும் இயலாமை
- கை கால்களில் விறைப்பு (STIFFNESS)

இயக்கக் குறைபாடுகள் தவிர, "இயக்கமற்ற" (NON-MOTOR) அறிகுறிகளும் ஏற்படுகிறது. அவை

- தூக்கக் குறைபாடுகள்
- மன அழுத்தம் அல்லது கவலை
- நறுமணத்தை உணரும் திறன் குறைதல்
- சிந்தனை அல்லது நினைவாற்றல் பிரச்சனைகள்

தற்போது இதை முழுவதுமாக குணப்படுத்த முடியாது, ஆனால் இவர்கள் சிறப்பாக வாழ சிகிச்சைகள் மூலம் அறிகுறிகளைக் கட்டுப்படுத்தலாம். இந்நோய் பெரும்பாலும் வயது முதிர்ந்தவர்களையே பாதிக்கிறது. ஆனால் இப்போது இளம் வயதினரும் இந்நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

### புள்ளிவிவரங்கள்:

- உலகளாவிய பார்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 10% பேர் இந்தியர்களாவர்.
- இந்தியாவில் 100,000 மக்கள் தொகைக்கு 15 முதல் 43 பேர் பாதிக்கப்படுவதாக மதிப்பாய்வு தெரிவிக்கிறது.
- குஜராத்தில் கிராமப்புறங்களில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் சுமார் 100,000க்கு 42 பேர் பாதிக்கப்படுகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.
- பல மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் சுமார் 40-45% பேருக்கு இளம் வயதிலேயே (22-49 வயதிற்குள்) இந்நோயின் அறிகுறிகள் தோன்றுகின்றன.
- ஆய்வின்படி, 2050க்குள் பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 100,000 பேருக்கு 267 பேர் வரை உயரலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

### ஜெபக்குறிப்புகள்:

- ஒவ்வொருநாளும் கைகால் விறைப்பு, நடுக்கம், மெதுவாக இயங்குதல், சோர்வு போன்றவற்றிலிருந்து கர்த்தர் அவர்களுக்கு மன உறுதியையும், பெலனையும், பொறுமையையும் அளிக்க...
- பயம், கவலை மற்றும் விரக்தி ஆகியவற்றால் பாதிக்கப்படாதபடி கர்த்தர் இவர்களுக்கு அமைதி மற்றும் சமாதானத்தைக் கொடுக்க...
- நகரங்கள் மற்றும் கிராமங்களிலுமுள்ள, பணக்காரர்கள், ஏழைகள் என்று பாராமல், ஒவ்வொருவருக்கும் சரியான மருத்துவ சிகிச்சைகள் கிடைக்க...
- கர்த்தர் பராமரிப்பாளர்களுக்கு பொறுமையையும், இரக்கத்தையும் கொடுத்து, அவர்கள் சோர்ந்து போகும்போது ஆறுதல்படுத்தி, ஆசீர்வதிக்க
- முழுமையாக குணம் கிடைக்கும்படியான புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்க அறிவியலாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும் கர்த்தர் ஞானத்தைக் கொடுக்க ஜெபிப்போம்.



# செஞ்சு மக்கள்

Ms. Lily Reaiah Grace



அடர்ந்த காடும், மலைகளும், நீரோடைகளும் கண்ணைப் கவரும் காட்சிகள். ஆனால் காடுகளில் வேட்டையாடுபவர்களாகவும், தேன் போன்ற காட்டுப் பொருள்களைச் சேகரித்து விற்பவர்களாகவும் உள்ளனர். இந்தியாவில் 1.3 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா ?

இப்படிப்பட்ட பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மக்கள் கூட்டமே இன்று ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் ஒடிசா மாநிலத்தில் வாழும் செஞ்சு மக்கள். பெரும்பான்மையானோர் கிருஷ்ணா நதி பகுதியான நல்லமலைப் பகுதியில் வாழ்கின்றனர். செஞ்சு என்ற திராவிட இனத்தைச் சேர்ந்த இவர்களின் மக்கள் தொகை 72000 பேர் மட்டுமே.

**தெய்வ நம்பிக்கை:**

"லிங்கமாயா மாய்சம்மா அல்லது பெடமா" என்ற தெய்வங்களை வழிபடுகிறார்கள். ஆந்திராவில் உள்ள ஸ்ரீசைலம் இவர்களது முக்கிய புண்ணியஸ்தலம். பகாபன்தாரு என்று தெய்வத்தின் மேலும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். காடுகளின் கடவுளான கரேலமாய் சாமா என்ற தெய்வத்தையும் வழிபடுகிறார்கள். சமீப காலமாக இந்து தேவ தேவதைகளையும் வழிபடுகிறார்கள்.

**சமூக அமைப்பு:**

வாலிபர்கள் தாங்கள் விரும்பும் பெண்ணை திருமணம் செய்ய முழு உரிமை பெற்றுள்ளனர். விவாகரத்துக்கும் முழு உரிமை உண்டு. வாழ்வின் போராட்டங்களை எதிர்கொள்ள வெறுமையைப் போக்கிக் கொள்ள செஞ்சு மக்கள் பெரும்பாலும் குடிக்கு அடிமையாகி உள்ளனர்.

**ஜெபியுங்கள்**

1. காவல் தெய்வத்தை வழிபடும் இவர்கள் கர்த்தாதி கர்த்தரை அறியும்படி ஜெபியுங்கள்.
2. இயற்கை வளங்களை மட்டும் சார்ந்து வாழும் இவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட ஜெபியுங்கள்.
3. இவர்கள் கல்வி அறிவுப் பெற ஜெபியுங்கள்.
4. குடிப்பழக்கம் இவர்களை விட்டு மாற ஜெபியுங்கள்.
5. இவர்கள் மத்தியில் சுவிசேஷம் சென்றடைய ஜெபியுங்கள்.

ock | #1410711870

Ms. Lily Reaiah Grace




**"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" (1 தீமோ. 6:10)**

இந்தியாவில் 2025ஆம் ஆண்டில் நடந்த மோசடிகள் அனைத்தும், பணத்தின் மீதான ஆசையும், சட்டவிரோத ஆதாயமும் நன்னெறி, ஒழுக்க முறை மற்றும் ஆவிக்குரிய உண்மையை (INTEGRITY) மறுக்கச் செய்யும் போது ஏற்படும் வேதனைகள் இவைகளே என நினைப்பூட்டுகிறதாக உள்ளது.

2025இல் இந்தியாவில் அதிகம் பதிவான முதல் 10 சைபர் மோசடி வகைகள்

- ஃபிஷிங் மோசடிகள் (PHISHING SCAMS)
- அடையாளத் திருட்டு (IDENTIFY THEFT)
- ஆன்லைன் வங்கி மோசடிகள் (ONLINE BANKING FRAUDS)
- இ-காமர்ஸ் மோசடிகள் (E-COMMERCE FRAUDS)
- லாட்டரி மற்றும் பரிசு மோசடிகள் (LOTTERY AND PRIZE SCAMS)
- தொழில்நுட்ப ஆதரவு மோசடிகள் (TECH SUPPORT SCAMS)
- சமூக ஊடக மோசடிகள் (SOCIAL MEDIA SCAMS)
- சிம் கார்டு மாற்றுதல் (SIM CARD SWAPPING)
- போலி பயன்பாடுகள் மற்றும் மால்வேர் (FAKE APPS AND MALWARE)
- தீம்பொருள் தாக்குதல்கள் (RANSOMWARE ATTACKS)

2025ஆம் ஆண்டில் நாடு முழுவதும் சுமார் 71,500 ஆன்லைன் மோசடி சம்பவங்கள் நிகழ்ந்திருக்கலாம் என்றும், இது மொத்தம் நடந்த 85,000 சைபர் குற்றங்களில் ஒரு பகுதி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

- டிஜிட்டல் கைது மோசடிகள் (DIGITAL ARREST SCAMS) மூலம் 2,000+ கோடி இழப்பு.
- முதலீட்டு மோசடிகள் (INVESTMENT FRAUDS) மற்றும் பிக்-பட்சிங் (PIG-BUTCHERING) மூலம் 4,636 கோடி ஏமாற்றப்பட்டது.
- போலி பயன்பாடுகள் (FAKE APPS) மற்றும் பிராண்ட் ஆள்மாறாட்டத்தால் (BRAND IMPERSONATION) 9,000 கோடி இழப்பு ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 56% மோசடிகள் UPI & QR கோடு மோசடிகளை உள்ளடக்கியவை.
- 16,000+ விஷிங்/ஸ்மிஷிங் சம்பவங்கள்.

**சைபர் குற்றக் கட்டுப்பாட்டில் முன்னேற்றங்கள்:**

இது மட்டுமல்லாமல், இந்த ஆண்டு சைபர் குற்றக் கட்டுப்பாட்டு பகுதியில் பல முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. இதற்காக தேவனைத் துதிப்போம். அவற்றில் சில பின்வருமாறு;

- மத்திய பட்ஜெட் 2025-2026, சைபர் பாதுகாப்பு திட்டங்களுக்காக 782 கோடி ஒதுக்கியுள்ளது.
- சைபர் மோசடிகளுடன் தொடர்புடைய 9.42 இலட்சத்திற்கும் அதிகமான SIM கார்டுகள், 2,63,348 IMEI எண்கள், 3,962 SKYPE ID-கள் மற்றும் 83,668 WHATSAPP கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.
- உடனடி சைபர் பாதுகாப்பு உதவிக்காக 1930 என்ற பிரத்யேக உதவி எண் (HELPLINE) மூலம் மக்களின் புகார்களுக்கு சேவை வழங்கப்பட்டு வருகிறது.
- இந்திய கணினி அவசர கால நடவடிக்கை குழு (CERT-IN) 109 சைபர் பாதுகாப்பு ஒத்திகைகளை நடத்தி இதில், பல்வேறு மாநிலங்கள் மற்றும் துறைகளைச் சேர்ந்த 1,438 நிறுவனங்களுக்கு சைபர் தயார்நிலைப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- 1,05,796க்கும் அதிகமான காவல் துறை அதிகாரிகள் இப்போது CYTRAIN போர்ட்டலில் பதிவு செய்துள்ளனர், மேலும் 82,704க்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- சைபர் மோசடிகளுக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தை வலுப்படுத்த, 'ஆன்லைன் கேமிங் ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குமுறை மசோதா, 2025' (PROMOTION AND REGULATION OF ONLINE GAMING BILL, 2025) ஆகஸ்ட் 21, 2025 அன்று நிறைவேற்றப்பட்டது.

**ஜெபக் குறிப்புகள்:**

**பாதிக்கப்பட்டவர்களுக்காக:**

நமது மக்கள் மோசடிகளை அடையாளம் காண ஞானமும் விவேகமும் அடையவும், பாதிக்கப்பட்டவர்களின் பணமும் மன அமைதியும் திரும்பக் கிடைக்கவும் ஜெபிப்போம்.

பாதிக்கப்பட்டவர்கள் பயம், அவமானம் அல்லது தயக்கம் இல்லாமல் குற்றங்களைப் புகாரளிக்க தைரியம் பெறவும், அவர்கள் எந்தவொரு மனரீதியான வேதனையிலிருந்தோ அல்லது அவமான உணர்விலிருந்தோ விடுவிக்கப்படவும் ஜெபிப்போம்.

**மோசடி செய்பவர்களுக்காக:**

இந்த மோசடிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் கிறிஸ்துவைச் சந்திக்கவும், குறிப்பாக நமது இளைஞர்கள் ஒழுக்கமான மற்றும் நேர்மையான வழிகளில் முன்னேறவும் ஜெபிப்போம்.

இந்த மோசடிகளை நடத்தும் ஒவ்வொரு கிரிமினல் நிறுவனமும் மற்றும் தனிநபர்களும் வெளிச்சத்திற்கு வந்து, பிடிபட்டு, தங்கள் செயல்களுக்கு பொறுப்பாக்கப்படவும் ஜெபிப்போம்.

**அதிகாரிகளுக்காக:**

காவல் மற்றும் சைபர் குற்றப்பிரிவு அதிகாரிகள் சிக்கலான வழக்குகளை விரைவாகவும், விடாமுயற்சியுடனும் கையாள ஞானத்திற்காகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யவும் ஜெபிப்போம்.

சைபர் குற்றங்களை மிகவும் திறம்படக் கட்டுப்படுத்த, அரசாங்கம் கடுமையான தொழில்நுட்பப் பாதுகாப்புகளையும், தடைச் சட்டங்களையும் இயற்றவும் ஜெபிப்போம்.

# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் - தேன்கனிக்கோட்டை

## (நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)




உத்தனபள்ளி திருச்சபை

# உத்தனபள்ளி திருச்சபை வரலாறு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூலம் 2002ஆம் ஆண்டு நாங்கள் உத்தனபள்ளி கிராமத்திலுள்ள கிருஷ்ணன், சாந்தி குடும்பமாக, அதாவது பிசாசின் பிடியிலிருந்த எங்களை அப்போது ஊழியம் செய்து கொண்டிருந்த சாலொமோன், எஸ்தர் இவர்கள் என் குடும்பத்தின் பிரச்சனை, பில்லி சூனியம் எல்லாவற்றையும் ஜெபத்தின் மூலமாக விளக்கினார்கள். நாங்களும் 2003ஆம் ஆண்டு முதலாவதாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டோம். அப்பொழுது கர்த்தர் அநேக நன்மைகளைச் செய்தார். இங்கு ஆலயம் இல்லாதிருந்த நேரத்தில் 2003ஆம் ஆண்டு எங்களுடைய வீட்டின் பின்புறம் இருந்த இடத்திலுள்ள ஒரு குடிசையில் ஜெபம் நடந்துக் கொண்டிருந்தது. அநேக விசுவாசிகள் ஜெபத்திற்கு வந்தார்கள். உத்தனபள்ளி வரலட்சுமி, புஷ்பா, கிருஷ்ணவேணி, பழனி, ஜெயந்தி, தேவசான பள்ளி ராணி, ஜெயந்தி என சுமார் 50 குடும்பங்கள் ஜெபத்தில் பங்கேற்றனர்.

அதன் பிறகு வந்த லூக்கா, ருக்மணி, ஊழியம் செய்ய வந்தவர்கள் குப்புசாமி, விஜயா மற்றும் விசுவாசிகள் எல்லோரும் முயற்சி செய்து ஆலயம் கட்ட இடம் வாங்கினார்கள். 2006-2007ஆம் ஆண்டு ஆலயம் கட்டி திறப்பு விழா நடந்தது. சுமார் 18 வருடமாக ஆலயத்தில் ஜெபம் நடந்து கொண்டிருந்தது. மேலும் அகரம் துப்புசானபள்ளி சஞ்சீவன் குடும்பம், ராஜண்ணா குடும்பம், கௌரம்மா குடும்பம், மாரப்பா குடும்பம், ஒபே பாளையம் சீனன்னா குடும்பம், ரமேஷ் குடும்பம் இன்னும் சில குடும்பங்கள் சீனகிரிபள்ளி மற்றும் அனாசோனை ஆலயங்களில் நடக்கும் ஆராதனைகளில் கலந்துக்கொள்கின்றனர். இன்னும் அதிகமான குடும்பங்கள் ஆராதனையில் கலந்துக்கொள்ள வேண்டும் என்று ஜெபித்துக்கொண்டிருக்கிறோம்.

லட்சுமிபுரம் முதல் விசுவாசி (நாராயணப்பா, நாராயணம்மா) தொடங்கி இன்று வரை அநேக குடும்பங்களும், அநேக ஊழியர்களும் வந்து ஜெபித்து பலன் பெற்றுக் கொண்டுள்ளனர். அநேகத் தடைகள், பிரச்சனைகள் வந்த போதிலும் ஆண்டவர் அளவுக்கதிகமான நன்மைகள் செய்து, ஒவ்வொரு குடும்பங்களையும் உயர்த்தி, நேசித்து, வழிநடத்தி வந்திருக்கிறார்.

**இங்கு வந்த ஊழியர்கள்:**


- ✦ சாலொமோன், எஸ்தர்
- ✦ லூக்கா, ருக்மணி
- ✦ குணசேகர், கண்ணகி
- ✦ டேவிட், வசந்தா
- ✦ வரதராஜ், நிர்மலா
- ✦ செல்வராஜ், எஸ்தர்

**ஜெபிப்போம்:**

- ✦ இன்னும் அநேகக் குடும்பங்கள் ஆராதனையில் கலந்துக் கொள்ள ஜெபிப்போம்.
- ✦ ஆராதனைகள் தடையில்லாமல் நடைபெற ஜெபிப்போம்.
- ✦ விசுவாசிகள் ஆராதனையில் தடையில்லாமல் கலந்துக்கொள்ள, இன்னும் அநேகரை ஆராதனைக்கு அழைத்து வர ஜெபிப்போம்.
- ✦ சபையிலுள்ள வாலிபர்கள் மிஷனெரிகளாக புறப்பட்டு வர ஜெபிப்போம்.
- ✦ இங்கு ஊழியம் செய்த ஊழியர்களுக்காக, அவர்களது குடும்பங்களுக்காக தொடர்ந்து ஜெபிப்போம்.

# ஜெபிக்கலாம் வா...

VIRAL NEWS




## மக்களை கொல்லும் காற்று மாசு

Delhi air pollution: AQI 'very poor' at 356; Supreme Court to hear plea on stubble burning

மக்களை கொல்லும் காற்று மாசு கட்டுப்படுத்தப்படவும், மனிதர்கள் தேவனின் படைப்பை பாதுகாக்கவும், இயற்கை மாசுபாட்டால் மனிதரும், இயற்கையும் அழிவடையாமல் காக்கப்படவும், இயற்கையை அழிக்காமல் பாதுகாக்கும் மனப்பான்மை வளரவும், இயற்கையை பாதுகாக்கும் ஆவிக்குரிய எண்ணத்துடன் ஜெபிப்போம்.



## புதிய வடிவில் உருவெடுக்கும் தீவிரவாதம்

White-collar terror module hunted for suicide bomber for a year, say officials

- படித்து பணியில் இருக்கும் மக்களை மூளை சலவை செய்யும் தீமையான சக்திகள் அகற்றப்படவும், மனிதர்கள் பகுத்துணர்ந்து செயல்படவும், சமூகத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுக்கப்படவும், நல்ல அறிவும், விழிப்புணர்வும் வளரவும் ஜெபிப்போம்.
- இந்தியாவின் வட மாநிலங்களுக்காகவும், குறிப்பாக ஜம்மு காஷ்மீர் மற்றும் எல்லைப் பகுதிகளுக்காகவும், அவற்றின் பாதுகாப்புக்காகவும் நாம் ஜெபிப்போம்.



## தேசத்தில் குண்டு வெடிப்பு சம்பவங்கள்

Delhi Blast Live Updates: NIA arrests suicide bomber's aide

தில்லி நகரத்தில் நடந்த வெடிகுண்டு வெடிப்பில் உயிரிழந்த மக்களின் குடும்பங்களுக்காகவும், அவர்களுக்கு தேவையான நீதியும், நியாயமும் கிடைக்கவும், இந்திய மண்ணில் இதுபோன்ற பயங்கர நிகழ்வுகள் இனி நடைபெறாமல் இருக்கவும், சமாதானமும்,பாதுகாப்பும் நிலவவும் நாம் ஜெபிப்போம்.




## ஒருதலைப்பட்சமாக பயன்படுத்தப்படும் வரிப்பணம்

- தேசத்தின் பல இடங்களில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்காகவும், தேசத்தின் மேம்பாட்டிற்காக மக்களால் கொடுக்கப்படும் வரிப்பணம் மற்றும் மக்களின் உழைப்பு, சரியான முறையில் தேசத்தின் நலனுக்காக செலவிடப்படவும் ஜெபிப்போம்.
- இந்திய மக்களின் மனதில் இயேசுவின் அன்பு விதைக்கப்படவும், அந்த அன்பை இந்தியர்கள் அனைவரும் ருசிக்கவும் ஜெபிப்போம்.




## தேசத்தில் காணப்படும் ஊழல்

India's position in the corruption index

தேசத்திலுள்ள அரசு சார்ந்த பதிவிலுள்ள ஒவ்வொருவரும் ஊழலை எதிர்த்து செயல்படவும், லஞ்சம் மற்றும் சொந்த லாபத்தை விரும்பாமல், பொதுநலனைக் கருத்தில் கொண்டு செயல்படவும் ஜெபிப்போம்.

## மக்களின் மனதை ஏமாற்றும் சமூக வலைதளம்

கடந்த சில வருடங்களில், சமூக ஊடகங்களின் பங்களிப்பு மக்களின் மனதில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய ஒரு கருவி, மக்களின் மனங்களில் பலவிதமான மாயையான எண்ணங்களை விதைக்கிறது. எனவே, மக்கள் நன்மை, தீமை எது என்பதை அறிந்து ஞானத்தோடு செயல்பட ஜெபிப்போம்.






## வருடத்தின் நன்றியின் நேரம்

- கிறிஸ்து பிறப்பு நாளானது வெறும் கொண்டாட்டமாக இல்லாமல், கிறிஸ்துவின் அன்பு இந்த தேசத்தின் மக்களின் மனங்களில் விதைக்கப்படும் நாளாக இந்த வருடம் அமைய வேண்டும் என்று ஜெபிப்போம்.
- இந்த வருடம் முழுவதும் தேவன் நம் தேசத்தையும், மக்களையும் வழிநடத்தினது போல, வரவிருக்கும் புதிய ஆண்டிலும் தேவனுடைய வழிநடத்தலும், பாதுகாப்பும் நம் தேசத்தில் காணப்பட வேண்டும் என்று ஜெபிப்போம்.

MR. R. GEORGE DANIEL



# பண்டிகை கால ஊழியம்

3rd WEEK MESSAGE
JESUS MISSION
Mr. M. Jerome Stanley

**"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்"** என்ற ஏசாயா தீர்க்கனின் வார்த்தைகளை இந்த கிறிஸ்து பிறப்பு பண்டிகை நாட்களில் நாம் அதிகமாக கேட்கப் போகிறோம். ஏற்கனவே பலமுறை கேட்டிருப்போம். இவ்வாண்டும் கிறிஸ்து பிறப்பு பண்டிகை உங்களுக்கு அர்த்தமுள்ளதாக அமைவதாக. ஏசாயா 9:6இல் உள்ள வசனத்தை சற்று விரிவாக பார்ப்போம்.

**"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்"** - பாலகன் என்றால் குழந்தை. ஒரு குழந்தையின் பிறப்பு என்பது இந்த உலகத்தில் வாழ்வதற்காக தான். ஆனால் கொல்லப்படுவதற்காகவே கிறிஸ்து பிறந்தார். இந்த உலகத்தின் பாவங்களுக்காக அடிக்கப்படுவதற்காகவே ஒரு குழந்தைப் பிறந்தது. அவருடைய பிறப்பு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், இது முழு மனுகுலத்தின் மீட்புக்கான ஒரே வழி. அவருடைய பிறப்பு நம்முடைய வாழ்விற்கான நம்பிக்கை, இந்த முழு மனுவிற்கான விமோட்சனம். அவருடைய சிலுவைப் பாடுகள் நம்முடைய பாவங்களின் உக்கிரத்தையும், நம்மில் வரவிருந்த தண்டனையின் வீரியத்தையும் காட்டுகிறது. அவருடைய வேதவாக்கின்படியான அடக்கம், நாம் பாவத்திற்கு செத்தவர்கள் என்பதையும்; அவருடைய உயிர்த்தெழுதல் நாம் மறுபடியும் புது சிருஷ்டியாய் கிறிஸ்துவின் சாயலில் பிறந்திருக்கிறோம் என்ற முழு நிச்சயத்தையும் நமக்குத் தருகிறது.

கிறிஸ்தவ வாழ்வு இதோடு நிறைவுப்பெறுகிறது என்பதுதான் பலரின் எண்ணம். கிறிஸ்தவ வாழ்வியலைச் செயல்படுத்தல், இயேசு கிறிஸ்துவின் தன்மைகளைப் பிரதிபலிப்பது என இவையெல்லாம் பலருக்கு ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது. இயேசு கிறிஸ்துவை அறிகிறது மட்டுமே நம்மைக் கரைச் சேர்க்காது. அவருடைய தன்மைகளை நம் வாழ்வில் செயல்படுத்துவதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இப்படி நாம் கிறிஸ்தவ வாழ்வியலில் முன்னேறி செல்லவே இந்த வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தது **"குமாரன் கொடுக்கப்பட்டார்"** குமாரன் என்றால் வாலிபப் பருவத்தை *(Youth)* குறிக்கிறது. **"கொடுக்கப்படுதல்"** என்பது அவர் நமக்காக ஏற்படுத்தப்பட்ட நித்திய மணவாளன். அவர் நமக்காக கொடுக்கப்பட்ட குமாரன் அதாவது மணவாளன். மேலும், இந்த வசனத்தை கவனியுங்கள், **"கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்"**. இதற்கு பல விளக்கங்கள் இருந்தாலும், கர்த்தத்துவம் என்பதன் பொருள் **"திரை"** அல்லது **"மூடுதிரை"** *(Veil)*.

இக்காலங்களில் சபை முன் நிற்கும் மணப்பெண், தன் முகத்தில் முக்காடுப் போட்டிருப்பாள். தாலியை மணவாளன், மணப்பெண்ணுக்கு அணியும் முன்பு, அந்த முக்காட்டை விலக்கிவிடுவார்கள். முக்காடு என்று சொன்னாலும் அது மணப்பெண்ணால் தன் எதிரிலிருக்கும் யாவற்றையும் பார்க்கக் கூடியதாக தான் இருக்கும் *(see through)*. ஆனால் பாரம்பரிய எபிரேய திருமணங்களில் மணப்பெண் அணியும் முக்காடு தடிமனானதாக, எதிரிலிருப்பவற்றைப் பார்க்க முடியாத திரைப்போன்றது. அது சற்று நீளமானதும் கூட. இந்த முக்காட்டை அணிந்த மணப்பெண்ணை, அவளுடைய தோழிகளும், உறவினர்களும் கைத்தாங்கலாக தான் மணவாளனிடம் அழைத்து வருவார்கள். அந்த திரையை விலக்கும் உரிமை, மணவாளனுக்கு மட்டுமே உண்டு. தன் மணவாட்டி முன்னிருக்கும் அந்த நீளமான திரையை அவன் எடுத்து தன் தோள்மேல் போட்டுக் கொள்வான். இப்பொழுது மணவாட்டி தன் எதிரிலிருக்கும் மணவாளனைப் பார்க்க முடியும். மணவாளன் தன் தோள்மேல் அந்த திரையைப் போட்டுக்கொண்டு மணவாட்டியின் அறைக்கு அவளைக் கூட்டிச் செல்வான். அப்பொழுது அவள் நடக்கும்போது மணவாளனோடு நெருங்கி நடக்க வேண்டும். அவளுக்கும், மணவாளனுக்கும் இடையே இருக்கும் இடைவெளி அதிகமாகும் போது, மணவாளன் தோளிலிருக்கும் திரை அவள் முகத்தின் முன் விழுந்துவிடும். அவள் வழி தெரியாத குருடி ஆகிவிடுகிறாள்.

கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும் என்பதன் பொருள், அவருடைய இரத்தத்தினால் மீட்பைப் பெற்ற புதிய ஏற்பாட்டு சபையான நாம், அவர் மூலமாகத்தான் இந்த உலகத்தைப் பார்க்க அழைக்கப்பட்டிருக்கிறோம். அவருக்கும், நமக்குமான இடைவெளி அதிகமாகும் போது, நாம் குருடர்களாகிறோம். அவருடைய வெளிச்சத்தில் உலகைப் பார்க்க முடியாமல், நாம் குருடர்கள் போல தவிக்கிறோம்.


நாம் அவரோடு கூட நடக்கும் ஒரு வாழ்வியலைத் தான் அவர் நம்மிடம் எதிர்பார்க்கின்றார். இது மணவாளன் மீது ஆழமான அன்பு இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். தேவைக்காகவோ, பயத்தினாலோ இதை செய்வோமானால் சீக்கிரம் நாம் தவறி போவோம். நான் என் அப்பாவிற்கும், அம்மாவிற்கும் மகனாக பிறக்கிறேன். என் வாழ்வு வரையும், ஏன் அது முடிந்த பிறகும், அவர்களுக்கு நான் மகன்தான். இருப்பினும், இந்த ஒரு நிலைக்காக மட்டும் நான் பிறக்கவில்லை. எனக்கான வயது வரும்போது, நான் ஒரு பெண்ணிற்கு கணவன் ஆகிறேன். அதை தொடர்ந்து என் பிள்ளைகளுக்கு தந்தை ஆகிறேன். இப்படி வாழ்வு என்னை முதிர்ச்சி அடைய செய்து என்னை வேறு நிலைகளில் பிரமாணிக்கச் செய்கிறது. அதுபோலவே கிறிஸ்தவ வாழ்வியலும், இயேசு கிறிஸ்துவின் உறவின் ஐக்கியத்தில் பிரமாணிக்க நம்மை அழைக்கிறது. அவரை நம்முடைய நித்திய மணவாளனாக நாம் ருசி பார்க்கும் போது நம் பண்டிகை அர்த்தமுள்ளதாகிறது.

இந்த பண்டிகைக் காலங்களில் அநேகர் தீவிர கிறிஸ்தவ ஊழியக்காரர்களாக மாறுவதுண்டு. அதிலும் ஏழைகளுக்கு உதவுதல், உடை, உணவுக் கொடுத்தல், ஊழியங்களுக்குக் காணிக்கைப் பிரித்தல் என்று சில கூட்டங்களும், கீத பவனி மற்றும் கீத ஆராதனை என்று சில கூட்டங்களும், அதற்கான பிராக்டிஸ் நிகழ்ச்சிகள் என்று தங்கள் வாழ்நாள் ஊழியத்தை நிறைவேற்றுபவர்களும் இதில் அதிகம். உங்களுக்கு சொல்லும் ஒரு செய்தி இந்த பண்டிகை கால ஊழியத்தில் உனக்கும், கிறிஸ்துவுக்கும் உள்ள நெருக்கம் எப்படி என்பதை மட்டும் உணர்ந்துக் கொள். பண்டிகைக் கால ஊழியத்தைத் தொடர்ந்து செய்.

**உனக்கு என்னுடைய கிறிஸ்துமஸ் பண்டிகை நல்வாழ்த்துக்கள்!**

# படைப்பு நுண்ணறிவு

## CREATIVE INTELLIGENCE



BOOSTER SPOT

Mr. Isaac Kamalesh

படைப்பு நுண்ணறிவு என்பது புதுமையான வழிகளில் சிந்திப்பதன் மூலம் புதிய யோசனைகள், கண்டுபிடிப்புகள், தயாரிப்புகள், கற்பனை செய்தல் மற்றும் பிரச்சனைகளுக்கு புதிய மற்றும் தனித்துவமான தீர்வுகளைக் கண்டறியும் திறன் ஆகியவற்றை உள்ளடக்கியது. பெரும்பாலும் கலை, இசை, வணிகம், அறிவியல் மற்றும் வாழ்வியல் துறைகளில் பெரிதும் பங்களிக்கிறது. இந்த படைப்பு நுண்ணறிவு பெற்றவர்கள் பெரும்பாலும் மற்றவர்கள் பார்க்காத சாத்தியக் கூறுகளைப் பார்ப்பதிலும், சவால்களை மேற்கொள்வதிலும், கேள்விகளைக் கேட்டு புதிய மாற்று சிந்தனைகளில் தீர்வு காண்பதிலும் (OUT OF BOX THINKING) பேர் பெற்றவர்கள்.

படைப்பு நுண்ணறிவைக் குறித்த விதிகள், கோட்பாடுகள், வகைகள், விளக்கங்கள் கல்வி உலகில் அதிகம் காணப்பட்டாலும், வேதமே அதற்கு மூல ஆதாரம் என்றால் மிகையாகாது. வேதப் பார்வையில் படைப்பு நுண்ணறிவு என்பது கடவுளுடைய நோக்கம் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப கற்பனைச் செய்ய, வடிவமைக்க மற்றும் உருவாக்க தேவன் கொடுத்த திறன். இது கடவுளின் சொந்த படைப்பாற்றலின் பிரதிபலிப்பு, அவரது சாயலில் படைக்கப்பட்டதன் ஒரு பகுதியாக மனுகுலத்திற்கு வழங்கப்பட்டது. சுருக்கமாகப் புரிந்துக்கொள்ள வேண்டுமென்றால்:

- கடவுள் படைப்பு நுண்ணறிவின் மூல ஆதாரம். கடவுளை மகிமைப்படுத்த, மற்றவர்களுக்கு பிரயோஜனமாகக் கொடுக்கப்பட்டது (1 கொரி. 10:31). ஆவியால் நடத்தப்படுகிறவர்கள் பகுத்தறிவோடு நடந்துக் கொள்ளவும் (ஏசாயா 11:2), புரிதலோடு வாழவும் கொடுக்கப்பட்டது.
- இதில் அழகு, ஒழுக்கம், நேர்மை, இறைவனின் மீட்பு, உண்மை இவைகள் மட்டுமே தவிர, பெருமை மற்றும் அநீதிக்கு இடமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக படைப்பு நுண்ணறிவு விசுவாசத்தோடு இணைந்து செயலாற்றக் கூடியது (எபி. 11:1).

### இதன் வகைகள் வேதத்தில் பல உண்டு ஒரு சில...

- கலை மற்றும் கைவினைத் திறன் - ART · CRAFT: பெசலெயேல், அகோலியாப் - கூடாரப்பணி
- தலைமையத்துவம் - LEADERSHIP: யோசேப்பு - பஞ்சத்திற்குத் திட்டம்
- தொலைநோக்குப் பார்வை - VISION: ஏசாயா, யோவான் - தெய்வீக உண்மைகளை உருவகத்தில் சொல்லுதல்
- கற்பித்தல் - TEACHING: இயேசு - உவமை வழியாகப் போதித்தல்
- அரசாட்சி - MANAGEMENT: சாலொமோன்
- இறை வழிபாட்டில் படைப்பாற்றல் - SPIRITUAL: தாவீது - சங்கீதம்

படைப்பு நுண்ணறிவு (CREATIVE INTELLIGENCE) என்பது கடவுளின் பரிசு (DIVINE GIFT), உண்மை மற்றும் அன்போடு கடவுளின் ஆவியில் நிறைந்து சிந்திப்பது, கற்பனை செய்வது, கட்டமைப்பது போன்ற திறன்களை உள்ளடக்கியது.

### படைப்பு நுண்ணறிவின் பயன்கள்:

- கடவுளின் சாயலைப் பிரதிபலிக்கும் - REFLECTS GOD'S IMAGE
- கடவுளின் இராஜ்யத்தின் காரியங்களுக்குப் பயனுள்ளதாயிருக்கும் - HELPFUL TO MINISTRY
- சமுதாயத்தில் மறுமலர்ச்சியைக் கொண்டு வரும் - SOCIETY TRANSFORMATION.
- உக்கிராணத்துவப் பொறுப்பை ஊக்குவிக்கும் - MOTIVATE STEWARDSHIP.

### படைப்பு நுண்ணறிவை வளர்ப்பதற்கான படிகள்:

- புதுப்பிக்கப்பட்ட மனதை வளர்த்துக் கொள்ளுங்கள் (ரோமர் 12:2) - CULTIVATE A RENEWED MIND
- விசுவாசத்தால் நிறைந்து ஆவியால் நடத்தப்படும்போது நம் கற்பனைகள் கட்டுக்குள் இருக்கும்
- பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலைத் தேடுங்கள் (யோவான் 14:26) - SEEK THE HOLY SPIRIT'S INSPIRATION
- ஜெபம் தெய்வீகக் கருத்துக்களைக் கொண்டுவரும் .
- சிறந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள் (கொலோ. 3:23) - DEVELOP A SPIRIT OF EXCELLENCE
- உங்கள் படைப்பு சுய விளம்பரத்திற்கு அல்ல, கடவுளை மகிமைப்படுத்த
- ஞானத்தையும் பகுத்தறிவையும் தேடுங்கள் (நீதி. 2:6) - EMBRACE WISDOM AND DISCERNMENT
- படைப்பு நுண்ணறிவு உண்மை மற்றும் ஒழுக்கத்துடன் ஒத்துப்போக வேண்டும்.
- படைப்பாற்றலுடன் பொறுப்புணர்வை நடைமுறைப்படுத்துங்கள் (யாத். 31) - PRACTICE CREATIVE STEWARDSHIP
- திறமைகளை (கலை, வடிவமைப்பு, தலைமைத்துவம், பிரச்சனைகளைத் தீர்ப்பது) தேவனுக்கென்று வளர்த்துக்கொள்ளுங்கள். படைப்பாற்றல் என்பது ஒரு பொறுப்புடைமை - தேவன் அளித்த திறமைகளை அவருடைய இராஜ்ய நோக்கத்திற்காகப் பயன்படுத்துவது.
- ஐக்கியத்துடன் நடைமுறைப்படுத்துங்கள் (பிர. 4:9) - COLLABORATE WITHIN THE BODY OF CHRIST
- ஐக்கியம் கருத்துக்களைக் கூர்மைப்படுத்துகிறது.
- கடவுளின் படைப்பைக் கவனியுங்கள் (சங். 19:1) - OBSERVE GOD'S CREATION
- இயற்கையும் வேதமும் சேர்ந்து கற்பனையை வடிவமைக்கும்

படைப்பு நுண்ணறிவு (CREATIVE INTELLIGENCE) என்பது கடவுளின் பரிசு (DIVINE GIFT), உண்மை மற்றும் அன்போடு கடவுளின் ஆவியில் நிறைந்து சிந்திப்பது, கற்பனை செய்வது, கட்டமைப்பது போன்ற திறன்களை உள்ளடக்கியது. இது விசுவாசத்தோடு இணைந்து ஊழியமாக உருவெடுத்து, கடவுளின் மகிமையை வெளிப்படுத்துகிறது. "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்" - எபே. 2:10.



# வாசற்படியில் இயேசு

Mrs. Kiruba Isaac

**இன்றைய ஆசரிப்புக் கூடாரங்கள் (CHURCH):**

பாரம்பரியத்தைப் பேசிக்கொண்டு பண்டிகைகள் மேல் நாட்டம்.
பகட்டு வாழ்க்கையை முன் நிறுத்தி பாகப் பிரிவினைகளில் முன்னேற்றம்.
பரிசுத்தத்தையோ, பக்தியையோ விட்டுத் தூரம் போனவர்களின் கூடாரம்.

**வாசற்படியில் இயேசு தட்டிக் கொண்டிருக்கிறார்.**

**இன்றைய ஆரோன் கூடாரங்கள் (PASTOR):**

DIGNITYயை MAINTAIN பண்ணி DECENTஆக வாழும் கூட்டம்.
DESIGNATIONயில் குறியாயிருந்து DUTY பார்க்கும் கூட்டம்.
DECERNING SPIRITயையும், DISCIPLE LIFEயையும் தொலைத்துவிட்டுத் தூரம் போனோரின் கூடாரம்.

**வாசற்படியில் இயேசு தட்டிக் கொண்டிருக்கிறார்.**

**இன்றைய யோசுவா கூடாரங்கள் (இக்கால ஊழியர்கள்):**

பக்தி மார்க்கத்தைச் செல்லமாக மாற்றிக்கொண்டிருப்பவர்கள்.
பாடல்களிலேயே ஊழியத்தை ஆரம்பித்து முடிப்பவர்கள்.
பாசாங்கு வாழ்க்கை வாழ்வோர் அதிகமுள்ளோர் கூடாரம்.

**வாசற்படியில் இயேசு தட்டிக் கொண்டிருக்கிறார்.**

**இன்றைய எஸ்றா கூடாரங்கள் (MISSIONS):**

இரண்டாம் தலைமுறை தரிசன தலைவர்களிடம் தரிசனத்தைப் பெற்றோர்.
இரண்டாம் எழுப்புதல் நடக்காதா என்று ஏக்கம் கொண்டோர்.
இரண்டறக் கலந்து கிடக்கும் தரிசனத்தையும், மேலாண்மையையும் கையாள திகைத்துப்போய் நிற்கும் கூடாரம்.

**வாசற்படியில் இயேசு தட்டிக் கொண்டிருக்கிறார்.**

**இன்றைய GEN Z கூடாரம்:**

"கன்னி" வயிற்றில் தேவன் பிறப்பு – சந்தேகம்
"நித்தியம்" இது ஏன்? எங்கு? எப்படி? – தெரியாது
"இரகசிய வருகை" "பகிரங்க வருகை" – கேட்டதே இல்லை
"இஸ்ரவேல்" "சபை" – புரியவே இல்லை
(இதை இனிமேல் தெரிந்துக் கொள்ள CHATGPTயை தேடிச் செல்லாதே)
உன் இதயக் கதவை (வெளியிலிருந்து திறக்க இயலாது)

**வாசற்படியில் இயேசு தட்டிக் கொண்டிருக்கிறார்.**

**உன் அனுமதி... அவர் பிரவேசம் உனக்குள் எழுப்புதல்... உன் மூலம் சபையில் எழுப்புதல்... சபை மூலம் தேசத்தில் எழுப்புதல்!**



# மதமும் Vs மார்க்கமும்(நீதி)

# RELIGION VS RIGHTEOUS

Rev. Daniel Gnanapragasam

மதம் என்பது மனிதக் குலத்தை ஆன்மீக வழியில் அல்லது தெய்வீக அனுபவத்தோடு தொடர்புபடுத்தும் நம்பிக்கைகளும், அது சார்ந்த பழக்க வழக்கங்களுமேயாகும். பெரும்பாலும் தன் சக்திக்கு மிஞ்சிய ஒரு சக்தி உண்டு என்பதை உணர்ந்த மனிதன் பயந்து, தங்களை விட பெலம் வாய்ந்த தன் சக்திக்கும், வலிமைக்கும் அப்பாற்பட்ட காரியங்களைத் தனதாக்கி, அதற்கு ஒரு படி கீழே நான் இருக்கிறேன் என்று அடையாளப்படுத்திய நடைமுறை சடங்குகள், வழிபாடுகள், பிரார்த்தனைகள் அனைத்தும் மதங்களாயின. மதங்களைக் கடவுளை அறிய உதவும் காரணிகளாக எண்ணினார்கள். எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து, கடவுளைப் பிரியப்படுத்தலாம் என்று வாழாமல் சன்மார்க்க நெறிகளும், நீதிச் சட்டங்களும் கற்றுக் கொடுக்கும் வரம்புகளுக்கு உட்பட்டு வாழ்வது சிறப்பாகும் என்று நீதிமார்க்கம் சுட்டிக்காட்டுகின்றது.

மதத்தின் மரபுகள் நம் அனுபவங்களாக கிடைக்கப்பெற்றது. ஆனால் மார்க்கமும், அதன் ஒழுக்க நெறிகளும் நம்மைப் படைத்த கடவுளால் நமக்கு அருளப்பட்டதாகும். சில இறையியல் கண்ணோட்டங்கள், மதம் ஒரு கட்டமைக்கப்பட்ட அமைப்பாக இருக்க முடியும் என்றாலும், உண்மையான நீதி கடவுளுடனான ஆழமான உள் உறவிலிருந்து வருகிறது என்பதை தெளிவுப்படுத்துகிறது. மதக்கிரியைகள் மற்றும் நடத்தைகளை நாம் ஏற்படுத்திக் கொண்டோம். மார்க்கக் கிரியைகள் மற்றும் நடக்கை முறைகள் நமக்கு கடவுளால் வெளிப்படுத்தப்பட்டு, கட்டுப்பாடுகளுடன் கடைபிடிக்க அழைக்கின்றது. கடவுளின் உண்மையான மகத்துவம் தூய்மையானது, வஞ்சனை இல்லாதது. அதனைப் புரிந்துக் கொள்ள மார்க்க நெறி நீதி சட்டம் வகுத்துக் கொடுத்து நம்மைப் பின்பற்ற அழைக்கிறார்.

| | மதம் - RELIGION | மார்க்கம் (நீதி) - RIGHTEOUS |
|---|---|---|
| 1. | இப்பிரபஞ்சத்தில் முப்பத்து முக்கோடி தெய்வ நம்பிக்கைகள் மதங்களாக வெளிப்படுகின்றன. | கடவுள் ஒருவரே என்ற அடிப்படையில் அவர் வழங்கும் நீதியும் ஒன்றே (1 கொரி. 1:27, 30). |
| 2. | பல மதக் கோட்பாடுகள் இறைவனைச் சென்றடைய, ஒழுக்க நெறி பல வகுத்துள்ளன. | நீதி மார்க்கத்திற்கு ஒரு வழி மாத்திரமே. நியாயமும், நீதியும் ஒன்றே ஒன்றுதான். உண்மை ஒன்று தான் இருக்க முடியும் (ரோமர் 5:17). |
| 3. | சடங்குகள், நடைமுறைகள் சார்ந்த விதிகளைப் பின்பற்றுகிறது. | ஒழுக்க நெறி மட்டுமே விதியாக பின்பற்றப்படுகிறது. கடவுள் நம்பிக்கையே நீதியாக்கப்படுகிறது (ஆதி. 15:6). |
| 4. | முன்னோர் கடைப்பிடித்த பாரம்பரியங்கள் மறுபடியும் மறுபடியும் புது பரிமாணங்களில் வெளிப்படுகிறது. | எத்தனை யுகங்கள் வந்தாலும் நீதி ஒன்றே, உண்மை ஒன்றே. அது ஒருக்காலும் புது பரிமாணங்களாக வருவதில்லை. |
| 5. | மதங்கள் கடவுளைப் பற்றிய அறிவில் வளரத் தடையாக உள்ளது. | மார்க்க நெறிகள் கடவுளின் உள்ளுணர்வைப் பிரதிபலிக்கின்றன. |
| 6. | மதங்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. அதுவே வாழையடி வாழையாக வலம் வருகிறது. | மார்க்க நெறி கடவுளால் அருளப்பட்ட ஒன்று. இது ஒரு பக்தி மார்க்கம். |
| 7. | மதங்களை அறிய காப்பியங்கள், புராணங்கள் மனிதனால் எழுதப்பட்டது. | பரிசுத்த கடவுளை நெருங்கவும், அவரை அறியவும் அவர் தந்த நீதிமார்க்கம் உதவுகிறது. |
| 8. | பாரம்பரியத்தில் மூழ்கிய குறுகிய பார்வைக் கொண்ட பண்புகள் மதம் என்ற போர்வையில் செயல்படுகிறது. | நிலையான வாழ்வு தரும் நித்திய மார்க்க நீதியை யாரும் கட்டுப்படுத்த முடியாது. |
| 9. | சுயநீதி, பெருமை, சுயவிருப்பம், பாரபட்சம், பாசாங்குத்தனம் போன்றவை மதத்தின் காரணிகளாக பார்க்கப்படுகிறது. | ஒரே நீதி, தாழ்மை, பொது விருப்பம், பட்சபாதம் இல்லாமை, போலியற்ற வாழ்வு முறைகள் எல்லாம் நீதிமார்க்கத்தின் காரணிகளாக உள்ளது. |
| 10. | பரிசேயன், மதக் குருக்கள், சதுசேயர்கள் மத அடிப்படைவாதிகள் எல்லோரும் சுய நீதிமான்களாக மதங்களைக் கொண்டு வாழ்கின்றனர். | நீதிமான் தன் நிலையை தகுதியற்றவனாய் உணர்ந்து, பாவி என்று அறிக்கையிட்டு கடவுளின் பார்வையில் பிரியமுள்ளவனாய் மாறுகிறான் (லூக்கா 18:9-14). |

# ஒருவருக்கொருவர் ஆறுதலளிக்கும் ஊழியம்

"ஊழியம்" (கிரேக்க மொழியில் DIAKONIA) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்குச் சேவை செய்வது என்று பொருள். இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கிபி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொண்டோம். இந்த மாதம் ஒருவருக்கொருவர் ஆறுதலளிக்கும் ஊழியத்தைப் பற்றி இறுதியாக பார்த்து, இந்த வேத ஆராய்ச்சியை நிறைவு செய்ய இருக்கிறோம்.

ஒருவருக்கொருவர் ஆறுதலளிக்கும் ஊழியம் முதலாம் நூற்றாண்டு சபையின் இறையியலிலும், கூட்டுவாழ்விலும் மையமானதாக இருந்தது. இந்த ஆறுதல் வெறும் வாய்ச்சொல் அல்லது அனுதாபமல்ல. இது ஆரம்பகால விசுவாசிகளுக்கு உள்ளார்ந்த ஆன்மீக வலிமையைக் கொடுப்பதாக இருந்தது.

## இந்த ஊழியம் ஏன் தேவையானது?

பல்வேறு காரணங்களால் ஆரம்பகால கிறிஸ்தவர்கள் மிகப்பெரிய மனஅழுத்தங்களை எதிர்கொண்டனர். முக்கிய காரணங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன:

- ★ **துன்புறுத்தலும், சமூக ஒதுக்கீடும்:** மக்கள் கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்டபோது, அவர்கள் தங்கள் குடும்பங்களால் நிராகரிக்கப்பட்டனர். ஜெப ஆலயங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மற்றும் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டனர் (அப். 8:3). அவர்கள் கேலி, பொருளாதார இழப்பு மற்றும் அரசு அனுமதிப் பெற்ற துன்புறுத்தல் போன்ற அச்சங்களை எப்போதும் எதிர்கொண்டனர் (அப். 4:18,21; 12:1-3; 16:19-22; 2 கொரி. 8:2).
- ★ **உள்ளார்ந்த மோதல்களும், கவலைகளும்:** சபை என்பது யூதர்களும், புறஜாதிகளும், பணக்காரர்களும் ஏழைகளும், அடிமைகளும், சுதந்திரமானவர்களும் கொண்ட ஒரு புதிய மற்றும் பல்வேறு மக்களைக் கொண்ட சமூகமாயிருந்தது. அவர்கள் ஒன்றாக வாழக் கற்றுக்கொண்டிருந்ததால், உராய்வுகளும், மனவிசாரங்களும் உருவாயின (அப். 6:1, 1 கொரி. 6:5-7, யாக். 2:1-4).
- ★ **நோயும், மரணமும்:** நவீன மருத்துவவசதிகள் இல்லாததால், நோய் அடிக்கடி வருவதும், அது பெரும்பாலும் மரணமாக மாறுவதும் சகஜமாக இருந்தது. இயேசுவின் காலத்திலும் கூட, இப்படியே நடந்தது. அப்போஸ்தலர்களும் பல்வேறு வகையான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களையும், பிசாசு பிடித்தோரையும் எதிர்கொண்டனர் (மத். 4:23-24; அப். 5:14-16, 8:7).

இவையெல்லாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் தேவை என்பதை மிகவும் உண்மையாக்கின. இன்றும் கூட, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற சமூகங்கள், கடந்தக் காலத்தைப் போலவே பற்பல வலிகளைச் சந்திக்கின்றன. இது இன்று நம் உள்ளூர் சபைகளை அக்கறைக் காட்டி, பராமரிக்கும் மையங்களாக செயல்பட அழைக்கிறது.

## அவர்கள் எங்கிருந்து ஆறுதலைப் பெற்றார்கள்?

எல்லா ஆறுதலுக்கும் முதன்மையான ஊற்றுக்காரணரும், மாதிரியும் தேவனே ஆவார். தேவன் தங்களுக்கு ஆறுதல் அளிப்பது, தங்கள் சொந்த நன்மைக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கு அவருடைய ஆறுதலின் கருவிகளாகத் தம்மைத் தயார்ப்படுத்துவதற்காக என்பதை விசுவாசிகள் அறிந்திருந்தார்கள். ஆகவே, தாங்கள் பெற்ற ஆறுதலை மற்றவர்களுக்கும் அளித்தார்கள். இவ்வாறு, சபை என்னும் சரீரத்தில் ஒரு சக்திவாய்ந்த, தானாக செயல்படும் ஊழியம் உருவானது (2 கொரி. 1:3-4).

## அவர்கள் அதை எவ்வாறு செய்தார்கள்?

ஆறுதலளிக்கும் ஊழியம் வாய்மொழி, நடைமுறை மற்றும் ஆவிக்குரியதாக இருந்தது. பெரும்பாலும் இவை ஒரே நேரத்தில் சேர்ந்தே நடந்தன.

### போதனை மற்றும் நினைவூட்டல் மூலம் (வார்த்தை):

ஆரம்பகால விசுவாசிகள் சிறிய குழுக்களாகக் கூடி அப்போஸ்தலர்களின் போதனைகளைக் கற்றுக்கொண்டனர் (அப். 2:42). எருசலேமிலிருந்து வெகு தொலைவில் சபைகள் நிறுவப்பட்டபோது, அப்போஸ்தலர்கள் அச்சபைகளுக்குக் கடிதங்களை எழுதினார்கள். இக்கடிதங்கள் ஆறுதலின் முதன்மையான கருவிகளாயின. உயிர்த்தெழுதலின் நம்பிக்கை (1 தெச. 4:13-18), தேவனுடைய சர்வ வல்ல ஆளுகை, தேவ அன்பு (ரோமர் 8:28, 35-39) மற்றும் கிறிஸ்துவின் வருகை (தீத்து 2:13) போன்ற சத்தியங்களில் அவர்களின் ஆத்துமாக்களை ஊன்றச் செய்வதின் மூலம் அவர்கள் பெலப்படுத்தப்பட்டனர்.

### கூடி வருதல் மற்றும் ஆராதனைகள் மூலம் (கூடுகைகள்):

கர்த்தருடைய விருந்து (அப்பம் பிட்குதல்) என்பது கிறிஸ்துவின் தியாகம், அவரில் விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்ட

Mr. Israel Nathaniel Edward

4th WEEK MESSAGE

NT MISSION

அடையாளம் மற்றும் அவரது வருகையைக் குறித்த விசுவாசம் ஆகியவற்றின் உண்மையான நினைவூட்டுதலாக அமைந்தது. சபை என்பது ஜெபவீடாக இருந்தது. துன்புறுத்தப்பட்ட சகோதரர்களுக்காக (அப். 12:5), நோயாளிகளுக்காக (யாக். 5:14-16) மற்றும் தேவைகளுக்காக ஜெபித்தது ஒருவருக்கொருவர் ஆதரவு கொடுக்கும் ஒரு சக்திவாய்ந்த செயலாக இருந்தது. தங்கள் போராட்டங்களில் அவர்கள் தனியாக இல்லை என்பதை உறுதிப்படுத்தியது. சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் ஞானப்பாட்டுகளைப் பாடுதல், இறையியல் உண்மைகளை அவர்களின் இருதயங்களில் பதியவைக்கவும், ஒன்றாகக் கூடி ஒருவருக்கொருவர் ஊக்கமளிக்கவும் சிறந்த ஒரு வழியாக இருந்தது (எபே. 5:19).

### நடைமுறைச் செயல்கள் மூலம் (அன்பின் கிரியைகள்):

ஆறுதல் மிகவும் நடைமுறை செயலாக இருந்தது. “ஒருவருக்கொருவர்” என்ற கட்டளைகள் அதற்கான அடிப்படையாக அமைந்தன. விசுவாசிகள் ஒருவர் மற்றொருவரின் பாரங்களைச் சுமந்தார்கள் (கலா. 6:2). சரீரப்பிரகார தேவைகளான உணவு, தங்குமிடம், ஏழைகளுக்கான நிதி உதவி, நோயாளிகள் மற்றும் விதவைகளைப் பராமரிப்பது ஆகியவற்றில் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவினார்கள் (அப். 6:1-7, யாக். 1:27). விருந்தோம்பல் (ரோமர் 12:13) மற்றும் உடைமைகளைப் பகிர்ந்து கொள்ளுதல் (அப். 2:44-45) போன்ற எளிய கனிவான செயல்களைச் செய்தார்கள் (எபே. 4:32). பிளவுபட்ட ஒரு உலகில், சபை என்பது முற்றிலும் ஒன்றிணைக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளும் இடமாக மாறியது. தங்கள் முந்தைய சமூகங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு ஒரு ஆழ்ந்த ஆறுதலாக இருந்தது (ரோமர் 15:7).

### ஆவியானவரின் வரங்கள் மூலம்:

பரிசுத்த ஆவியானவர் இந்த ஊழியத்திற்காக குறிப்பிட்ட நபர்களைப் பெலப்படுத்தினார். “ஊக்கப்படுத்தும் வரம்” (அல்லது “உபதேசம்”, கிரேக்கத்தில் “PARAKLESIS” (ஆறுதல்) என்ற சொல்லே) ரோமர் 12:8இல் பட்டியலிடப்பட்டுள்ளது. பர்னபா (“ஊக்கத்தின் மகன்” என்று பொருள்படும்) போன்றவர்கள், சவுல் / பவுல் (அப். 9:27) மற்றும் யோவான் என்ற மாற்கு (அப். 15:36-39) போன்ற புதிய விசுவாசிகளை ஆறுதல்படுத்துவதிலும், இணைப்பதிலும் முக்கிய பங்கு வகித்தனர்.

### நாம் என்ன செய்ய வேண்டும்?

நாம் கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடும் இந்த நேரத்தில், சகல ஆறுதலின் தேவனே இயேசு கிறிஸ்து என்று அறிந்துணரத்தக்க ஒரு நபரை இந்த உலகத்திற்கு அனுப்பியதின் மூலம், நம்மைச் சந்தித்தார் என்பதை நமக்கு நாமே நினைவுபடுத்திக்கொள்ளலாம். இயேசு இவ்வுலகிலிருந்து திரும்பிச் செல்லும் போது, ஆறுதலளிப்பவரான பரிசுத்த ஆவியை நம் இருதயங்களில் வசிக்கும்படி நமக்குக் கொடுத்தார். ஆகவே, வேதனையில் உழலும் இவ்வுலகில் நாம் சமாதானத்தின் பிள்ளைகளாயிருந்து, நம்முடைய சர்வ வல்ல தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆறுதலால் ஒருவரையொருவர் தொடர்ந்து தேற்றுவோமாக.

**2026ஆம் ஆண்டிற்கான கேரீத் எழுத்தாளர் திட்டக்கூடுகை நவம்பர் 22 & 23 ஆகிய தேதிகளில் ஒட்டன்சத்திரத்தில் (பாச்சலூர்) மிகவும் சிறப்பாக நடைபெற கிருபை செய்த கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. இக்கூடுகையில் உற்சாகமாய் கலந்துக் கொண்ட ஆயர்கள், அண்ணன், அக்கா மற்றும் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**
**2026ஆம் ஆண்டின் கேரீத் இதழ் சிறப்பாக அமையவும், கட்டுரைகளை எழுதும்படி பொறுப்பெடுத்துள்ள ஒவ்வொருவருக்காகவும் தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.**
**- Rev. ஜெ. டேனியல் அருள்மணி**



# திறந்த வாயில்

Rev. Prabakara Sarathy

அப்போ! இப்போ! எப்போ!!

"உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்." [வெளி 3:8]

**வரலாற்றுப் பார்வை:**

பரிசுத்த வேதாகமம் நெகேமியா புத்தகத்தில், இடிந்த நிலையிலிருந்த வாசல்களை (அலங்கத்தை) நெகேமியாவும், அவருடைய ஒரு கூட்ட ஜனமும் தரிசனத்தோடும், ஈடுபாட்டோடும் கட்டிய விதத்தை வெளிப்படுத்துகிறது. "எழுந்து கட்டுவோம்" என்ற எழுச்சி அதைக் கட்டி முடிக்க உதவி செய்கிறது. அதனுடைய முழுவீச்சின் செயலாற்றுதல் சாதாரணமான செயலை வேகமடையச் செய்கிறது. சரித்திரமும், பரிசுத்த வேதாகமமும் அந்த வாசல்களைப் பழுது பார்த்தவர்களின் பெயர்களையும், அதை உந்துவித்த நெகேமியாவின் பெயரையும் நீக்க முடியாத அளவிற்கு அழுத்தமாக பதிவுச் செய்துள்ளது.

**ஆவிக்குரியப் பார்வை:**

அந்த நல்ல வேலைக்குத் தங்களைத் திடப்படுத்தி, அதைக் கட்டி முடித்த அவர்களுடைய பணியின் தரிசனமும், செயல்பாடும் தேவனுடைய கனமான ஊழியத்திற்குப் புதிய விசுவாசிகளையும், கிறிஸ்தவ வாலிபர்களையும், ஊக்குவிக்கின்றன. "நான் உன் முன்னால் திறந்த வாசலை வைத்து இருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டக்கூடாது" என்பது தேவனின் வாக்குத்தத்தமாக இருக்கிறது. ஏனெனில் அவர் கர்த்தர், சர்வ வல்லமையுள்ள தேவன். தேவன் "திறந்த வாசல்" முற்றிலும் திறந்ததாக இருக்கிறது. அதில் எந்தவிதமான பழுதுபார்க்கும் வேலையுமில்லை. நம்முடைய செயல்களை அவர் அறிந்திருக்கிறார். நம்முடைய செயல்கள் என்பது, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை, ஜெபம் மற்றும் சாட்சியுள்ள வாழ்க்கையே.

**ஊழியப் பார்வை:**

நம்முடைய ஊழியத்தில் வாசல்களைக் கட்டி முடிப்பது என்பது ஒரு வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் இருக்கிறது. "தேவன் நம் எல்லோரையும் அந்த வாசல் வழியாக உட்பிரவேசிக்க வைத்து ஓர் உத்தரவாதத்தையும் நமக்குத் தருகிறார். "எந்த ஒரு வாசலையும் திறக்கிற வல்லமை அவர் ஒருவருக்கே உண்டு" கர்த்தர் திறந்த வாசலைப் பூட்டுகிற வல்லமை வேறொருவருக்கும் கிடையாது. ஏனெனில் அவர் கர்த்தர், சர்வ வல்லமையுள்ள தேவன்.

**வேதாகமப் பார்வை:**

பரிசுத்த வேதாகமம், வாசல்களைப் பழுது பார்க்கிற கடினமான வேலையைச் சில வசனங்கள் மூலமாக நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. கர்த்தர் சுவிசேஷப் பணியில் நம்மை ஈடுபடுத்துவதற்காக வாசல்களைத் திறக்கிறார். 1 கொரி. 16:9, 2 கொரி. 2:12 மற்றும் கொலோ. 4:3 போன்ற வசனங்களில் சுவிசேஷம் அறிவிப்பதற்காகவும், ஆத்தும ஆதாயம் செய்வதற்காகவும் கர்த்தர் நம்மை அழைக்கிறார்.

கர்த்தர் சபையின் வாசல்களை விசுவாசிகளுக்காகத் திறக்கிறார். அவருடைய வார்த்தைகளில் விசுவாசம் வைத்து, சுவிசேஷத்தை எதிர்ப்புகளின் மத்தியிலும் உண்மையும், உத்தமமுமாக அறிவிக்க வேண்டுமென அவர் வாஞ்சிக்கிறார். கர்த்தர் வாசல்களைத் திறப்பதின் நோக்கம் "விசுவாசிகள் கர்த்தருடைய எண்ணத்தைப் பிரதிபலித்து, சபைகள் ஊழியங்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதாகும். கிறிஸ்துவை மையமாக வைத்து இந்த கனமான ஊழியத்தின் அழைப்பை ஏற்று நடக்க வேண்டுமென கர்த்தர் அழைக்கிறார்.

"திறந்த வாசல்களின் வழியாக உட்பிரவேசிப்பது" அவ்வளவு எளிதல்ல. நம்முடைய மனதிலே ஒரு அளவில்லாத வாஞ்சையோடும், முழுத் தீர்மானத்தோடும் அவருக்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும் செயல்பட வேண்டும். மேலும் சுவிசேஷப் பணியைச் செய்து முடிக்கத்தக்கதாக விசுவாசத்தோடும், தீர்க்கமாகவும் செயல்பட வேண்டும். கர்த்தருக்கு ஊழியம் செய்வது நமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு. இந்த மகத்தான வாய்ப்பு அவரே நமக்கு அருளியது. இந்த சுவிசேஷ வேலையை நாம் செய்யும்போது, அவருடைய மகத்தான பிரசன்னம் நம்மை நடத்துகிறது.

இந்த "திறந்த வாசல்" என்பது முழுநேர ஊழியத்திற்கான அழைப்பாக இருக்கலாம். நீங்கள் ஒருவேளை வாலிப ஜெபக்குழுத் தலைவராக இருக்கலாம். அவருடைய ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காக, ஞாயிறு வேதாகமப் பள்ளி ஆசிரியராகவோ, கர்த்தருடைய வசனங்களைப் போதிப்பவராகவோ, வழி நடத்துபவராகவோ இருக்கலாம். கலாச்சாரம் மற்றும் மொழி வேறுபட்ட நம்முடைய பள்ளிகளான, ஜார்கண்டிலுள்ள பந்தேனி, குஜராத்திலுள்ள ஜாவ்டா மிஷன் பள்ளிகளில் ஆசிரியர்களாக ஒரு குறுகிய காலத்திற்குச் செல்லலாம். அல்லது ஒரு மருத்துவராகவோ, மருத்துவம் சார்ந்த (Para Medical) வேலையையோ ஒரு சேவை மனப்பான்மையுடன் செய்யலாம்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஓர் அழைப்பு:**

பிரியமான வாலிபர்களே! "கர்த்தரே வழி" (யோவான் 14:6), "அவரே வாசல்" (யோவான் 10:9), அவர் உங்களை உட்பிரவேசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவர் புல்லுள்ள இடங்களை உங்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். மிகுந்த கனிகளைக் கொடுக்கும் ஊழியத்தை உங்கள் முன் வைத்திருக்கிறார். நீங்கள் இயேசுவைப் பின்தொடர FMPB உங்களை அழைக்கிறது. இந்த சிறப்பான மிஷனெரி ஊழியத்தின் சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் மிஷனெரிப் பள்ளிகளிலும், அலுவலக வேலைகளிலும் உங்களுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தி தருகிறது. FMPB நாடெங்கிலும் அர்ப்பணிப்புள்ள, அனுபவமிக்க ஊழியங்களையும், வாலிப ஊழியர்களையும் கொண்டது.

**இந்த அழைப்புக்கு உங்களுடைய பதில் என்ன?**

நீங்கள் அவருடைய வாக்குத்தத்தத்தைப் பின்பற்றி அவரைப் பின் தொடர விரும்புவீர்களானால் எங்களுடன் சேருங்கள். அறுவடையைத் தருகிற தேவன் உங்களுடைய சிந்தனையைத் தூண்டி FMPB மிஷனெரி இயக்கத்தில் இணைந்து ஈடுபட வாஞ்சையைத் தந்தருள்வாராக!




நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
திருவள்ளூர் மண்டலம்
அமைத்து நடத்தும்
வாலிபர் முகாம்
2026
ஜனவரி
காலை 15 (வியாழன்) 9.30 மணி
முதல்
மதியம் 17 (சனி) 1.00 மணி
வரை
இடம்: இறைவனின் தோட்டம்
சென்றாயன் பாளையம், பூண்டி,
திருவள்ளூர் மாவட்டம்.
செய்தியாளர்கள்:
Rev. விஜய் P. ஐசக், G.S., FMPB
Dr. ஜான் டேனியல், SAIACS – Bangalore
Rev. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங், FMPB
Rev. ரவிக்குமார், FMPB, Salem
Rev. P. டேவிட், FMPB,Kovai
சகோ. விக்னேஷ்வரன் (மிஷனெரி, குஜராத்)
LIVELY SONGS
ENGAGING SESSIONS
INSPIRING MESSAGES
வயது வரம்பு: 17 முதல் 30 வரை
பதிவு கட்டணம் : ரூ.150/-
வேதாகமம் மற்றும் படுக்கை கொண்டு வரவும்.
ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே தங்கும் வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
கருப்பொருள்
எழும்பி பிரகாசி
ஏசாயா 60:1
அன்புடன் அழைக்கிறோம்!
தொடர்புக்கு
FMPB, PH: 98940 60046,
98419 36067, 9600114574


தென்மண்டலம் நடத்தும்
கிதியோனியர்
குடும்ப முகாம் - 2026
கருப்பொருள் :
இவர்களிலும் அதிகமாய்
யோவான் 21 : 15
ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும், மிஷனெரி தரிசனத்தில் வளரவும், சபையாக, ஜெபக்குழுவாக, குடும்பமாக அணி திரண்டு வாருங்கள்!
சிறப்பு நிகழ்வுகள் :
தரிசனமிக்க பாடல்கள்
அனலூட்டும் செய்திகள்
உணர்வூட்டும் சந்தியா வேளைகள்
ஜார்கண்ட் மாநிலத்தின் ஆத்தும பாரத்தை தரும் பணித்தள பகிர்வுகள் மற்றும் சந்தால் கலாச்சார நடனம்.
பதிவு கட்டணம் ரூ.100 (5 வயதிற்கு மேற்பட்டவர்)
...நாள்...
ஜனவரி 15 வியாழன் காலை 9.30 மணிமுதல்
ஜனவரி 17 சனி மதியம் 2.00 மணிவரை
...இடம்...
CSI ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி
நல்லூர், ஆலங்குளம்
தலைமை :
The Rt.Rev.Dr. ARGST.பர்னபாஸ் B.A.,B.D.,D.D.,
பேராயர், CSI
திருநெல்வேலி திருமண்டலம்
முன்னிலை :
Rev. D.வில்சன் சாலமோன்ராஜ் B.Sc.,B.D.,
மேற்கு சபை மன்றத்தலைவர்
CSI, நல்லூர்
செய்தியாளர்கள் :
Rev. D.பால் சாலமோன் FMPB, சென்னை
Rev. P.பிரடெரிக் சத்திய சாமுவேல்
ஆயர், CSI, திருநெல்வேலி திருமண்டலம்
Bro. J.ரூபன் ராய் நெல்லை
Rev. S.டேனியல் தாமஸ்
செயலர், FMPB, தமிழ்நாடு & பாண்டி
மற்றும் வட இந்திய மிஷனெரிகள்
அனைவரும் குடும்பமாக பங்கு பெறுங்கள்..!
தொடர்புக்கு : தென் மண்டலம் C/o Rev. S.டேனியல் தாமஸ்
செயலர், FMPB தமிழ்நாடு & பாண்டி, Cell : 94888 05454
பிராந்திய அலுவலகங்கள் :
தென்காசி - 94218 89013
நெல்லை வடக்கு - 75980 18774
நெல்லை தெற்கு - 70943 93732
தூத்துக்குடி வடக்கு - 94436 94021
தூத்துக்குடி தெற்கு - 94443 93228
கன்னியாகுமரி - 62843 82348
ஆலங்குளம் - 94427 69813
94430 75053
94425 72765


கேரீத் வாசகர்கள் அனைவருக்கும்
எங்களது இனிய
கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!